Rec. 184/23

1 ½ SEP 1923

142
3-23

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிற்றின்பசாஸ்திரசிந்தாமணி.

பன்னிரண்டாம்பதிப்பு.

A VERY USEFUL BOOK.

RARE & PLEASANT

C. A. சாமிநாதபிள்ளையால்

இயற்றப்பட்டது.

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1922 [அணா—8.

55

உ

சிவமயம்.

சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி.

A VERY USEFUL BOOK.

RARE & PLEASANT

இத்தமிழ்தேச வாசிகளுக்கு

இஃது

ஓர் கற்பகத்தரு என்னலாம்.

இது

சிதம்பரம்

அ. சாமிநாதபிள்ளையவர்கள்

செய்யப்பட்டது.

பி. நா. சி. ஏஜெண்டு

மூ கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

சென்னை-குயப்பேட்டை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பனிரெண்டாம் பதிப்பு.

இதன் விலை] 1922. [அணா—8.

Registered Copy-Right.

இதிலடங்கியவிஷயங்கள்.

	பக்கம்.
முகவுரை	3
மாதர்களது பருவப்பெயர்	6
மாதர்கள் போககாலவிளக்கம்	7
மாதர்களின்ஜாதியுமிலக்ஷணமும்	8
மாதரைச்சேரும் வயதுவிளக்கம்	9
இன்னநக்ஷத்திரங்களில் மாதர் போகம் கூடாதென்பது	10
விழுப்புக்காரியைச் சேருவதைப்பற்றிய விவரம்	11
ருதுகால சந்தான விவரம்	11
மருவுநாள்மீது இத்த[illegible]	14
அதிகப்புணர்ச்சியால் வருமாபாயம்	15
சற்புத்ரோற்பத்தி விளக்கம்	16
மங்கையைமருவும் இதக்கிரமம்	17
புணர்ச்சிக்குப்பின் அருந்துவன	18
நான்குவித புருஷஜாதிகளின் இலக்ஷணமும் குணமும்	19
நான்குவித ஸ்திரீஜாதிகளின் இலக்ஷணமும் குணமும்	20
மத்திமஸ்திரீயின ஷெ. ஷெ. ஷெ	21
அதமஸ்திரீயின் ஷெ. ஷெ. ஷெ	21
அதமாதம ஸ்திரீயின் ஷெ. ஷெ.	22
சம்போகம்கூடாதசமயவிளக்கம்	22
இன்னமாதர்களிடம் சம்போகம் கூடாதென்பது	[illegible]
கர்ப்பமாதர்களின் கவனிப்பு	24
கங்காஸ்நானஸ்மவசியமான	25
புத்திர ரூபபேத விளக்கம்	25
சங்கமமங்கையர்சாதன விளக்கம்	26
கர்ப்பக்குறி காண்டல்	38
ஆண்குழந்தையைக் கர்ப்பத்தில் அடையுந்தந்திரம்	29
பெண்குழந்தையை ஷெ. ஷெ	29
கர்ப்பத்தில்கருவமையும்விளக்கம்	30
மாதவிடாஸ்நான மங்கையர்மர்ம	30
முதல் மாதப்பிண்ட நிலைமை, 2-வது மாதப்பிண்ட நிலைமை, 3-வது மாதப்பிண்ட நிலைமை	33
4-வது மாதப்பிண்ட நிலைமை, 5-வது மாதப்பிண்ட நிலைமை, 6-வது மாதப்பிண்ட நிலைமை	34
7-வது மாதப்பிண்ட நிலைமை	34
8-வது மாதப்பிண்ட நிலைமை	34
9-வது மாதப்பிண்ட நிலைமை, 10-வது மாதப்பிண்ட நிலைமை	35
ஆண்சிசுவுள்ள கர்ப்ப அடையாளம்	36
பெண்சிசுவுள்ள ஷெ. ஷெ.	36
ஆண்மலட்டின் விவரம்	37
பெண்மலட்டின் விவரம்	38
இன்னோர் மலடென வறியுந்திறம்	38
இரட்டைப்பிள்ளை விவரம்	39
பு[illegible]ணரூப விபரீதவிளக்கம்	40
[illegible] பிரசவித்தலின் முன் [illegible]	41
கர்ப்பிணி ஆசாரக்கிரம விளக்கம்	41
கர்ப்பிணிகளின் [illegible]க்கிரம நடப்பு	42
பிரசவித்தவளுக்கு உடன்செய்யும் சிகிச்சை	43
சிசுவின் தொப்புட்கொடிசிகிச்சை	44
பிறந்த குழந்தை அழாதிருந்தால் அழச்செய் சிகிச்சை	45
பிரசவஸ்திரீயின் ஜன்னிசங்கார	45
பிரசவித்த ஸ்திரீயின் உதிரச்சிக்கல் நிவாரணி	45
கஷ்டப்பிரசவ நிவாரணி	45
மரித்தபிண்டம் வெளிப்படுத்தும்விதம்	46
இரத்தப்பெருக்கு நிற்க	46
கற்றாழைநாற்றகஷ்டத்தைமாற்ற	46
பாலூணப் பிரகாசிகை	48
பால் இலக்கணம்	48
பாத்திரின் விரிவு	48
தேவதாக்ஷரவிளக்கம்	49
ஊமையெழுத்து விளக்கம்	49
மூலபஞ்சாக்ஷர விளக்கம்	49
ஸ்ரீதிருமூலச்சோதி விளக்கம	49
[illegible]ஞான விளக்கம்	50
செந்தமிழ் விளக்கம்	51
கல்வி	54
அறஞ்செய்யார் திரவியமடையுங்கதி	54
கடன் காலவிடம்	55

3

உ

முகவுரை.

இவ்வுலகத்திலே நம்மாற் காண[illegible]டும் பல [illegible]ராணிகளுக்கான ஜீவபேதங்களுள் மானிடப்பிறவியே மிக மேலாயதென்பது எவரும் ஒப்ப முடிந்ததாம். இத்துணைப்பெருஞ் சிறப்பெய்திய மானிடயாக்கையைப் [illegible]ற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அதன் பிரயோசனமாக அ[illegible]க்கூடியவை சிற்றின்பம் பேரின்பம் என்னுமிரண்டுமாம்.

தற்காலத்திலே பேரின்பத்தைக் கருதி பாடுபடும் பாக்கியவான்கள் பதினாயிரவருள் ஒருவரையேனும் பார்ப்பது அரிதினும் அரிதாய் முடிந்தது. நிற்க, மற்றும் சிற்றின்பத்துக் கேதுவான பேறு பதினாறனுள் ஒன்றாய் சத்சந்தானத்தையேனும் விர்த்திசெய்ய வேண்டி அதற்குள்ள விதிவிலக்குகளை நன்றாயறிந் தொழுகுவார் பெரும்பாலும் ஒருசிலரே தவிர, மற்றையோரெவரும் தங்கள் வாழ்நாளை வீணாளாகக்கழித்து காலக்கிரமமாகப் போகிப்பதை யொழித்துத் தங்களுக்குப் பிரியம் நேர்ந்தப[illegible]தெல்லாம் வரம்பின்றிப் புணர்ந்து அதனால் கூன், குருடு, செவிடு, ஊமை, மூடமென்பனவற்றையுடைய அவலப் புதல்வர்களைப்பெற்று அவர்களாலடையும் இகலோக வின்பமுமிழந்து பரலோக சுகத்துக்கும் பாத்தியப்பட சாத்தியப்படாமல் ஆஸ்தியுடன் வம்ச நாஸ்தியடைகின்றார்களாதலால் அத்தகையோர்க்கு இப்புத்தகம் மெத்தவும் யுக்தமெனக் கருதியே (ஸ்ரீ சிவபிரான் பார்வதிதேவியார்க் [illegible]கருளியபடி) சமஸ்கிருதபாஷையில் பலநூல்களிலும் கூறிப் போந்ததை ஒருசேரத்திரட்டித் தமிழ்நாட்டனைவருக்கும் உபயோகப்படுமாறே எனது சிற்றறிவுக் கெட்டியவரைத் தமிழ்ப்பாஷையில் நாயகநாயகி சல்லாபவியன்மொழியாகக் கற்பித்து அச்சிடலாயிற்று.

பி. அ. சா.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இந்த சிற்றின்பசாஸ்திர சிந்தாமணியெ... நூலின் ரிஜிஸ்டர் உள்பட எடிட்டர் பாத்திய...தையை அடியில் கையொப்பமிட்டவர்களால் கிரயத்துக்கு ...ங்கிச் சொந்தமாக அச்சிடப்பட்டு வருகிறபடியால் இதை வேறெவர்களும் அச்சிடக்கூடா தென்பதைக் கண்டிப்பாயறியவும். மீறி அச்சிடுவார்களாயின் சட்டப்படி பலவித நஷ்டத்துக்கு முள்ளாவார்க ளென்பதைத் தெரிவிக்கலாயிற்று.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

அண்டு பிரதர்ஸ் அவர்களது,

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்,

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு,

சென்னை.

கடவுள் துணை.

மங்கைய ரிங்கித சங்கதி தங்கிய

[illegible]ரகசியப் பிரகாசிக்க வெனும்

சிற்றின்பசாஸ்திரசிந்தாமணி.

அற்புதம் பொருந்திய கற்பக நாட்டிலும் [illegible] வனத்த புரியென்னும் நகரிலே தினகரமேனியன் என்பவன் ஒருவன் இருந்தான். அவ்வேறு மன்மதனைப் பழித்த மகா ரூபலாவண்ய முள்ளவனும், கல்வியிற் [illegible] திலையையும், செல்வத்திற் குபேரனையும் ஒத்தவனும், ஒப்புவமையற்ற சுற்பலங்காரியாகிய கமலாக்ஷி யென்னும் காதலியோடு கலந்து வாழ்ந்து வருநாளில் ஓர்நாளிரவில் இருவரும் உண்டு களித்து உரையாடி விளையாடி உப்பரிகையின்மேற் சென்று சந்திர பிரகாசத்தைக் கண்டு தென்றற்காற்றைத் நோக்கிக்கொண்டு மகா சந்தோஷசித்தர்களாய் உல்லாசமாகச் சிறிதுநேரம் உலாவியபின்னர் சயனத்தை யுத்தேசித்துப் பள்ளிக்கையறையடைந்து அங்கே பலவிதமான லஸ்தர் குளோப்பு வால்செட் முதலிய நானாவித அலங்காரங்களோடு இரசகுண்டுகளாலும் ஜொலிக்க, அதன் மத்தியிலே நவரத்ன கசிதமாய் விளங்கிய மஞ்சத்தின்மீது இருவருமிருந்து பலவித சிற்றுண்டிகளுண்டு பின்னர் உயர்ந்த ஆடையாபரணலங்கிருதர்களாய் பரிமளமிகுந்த கருமலரணிந்து சந்தன களப கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களைக் கூடியவரையிற் பூசிக்கொண்டு தினகரமேனியன் கமலாக்ஷி யென்னும் காதலியின் மதிமுகத்தைக் காமவிரகத்தோடு பார்த்தனன்.

அங்ஙனம் பார்த்ததனைக் குறிப்பாயுணர்ந்த கமலாக்ஷி நாயகனை நோக்கி ஏ பிராணவல்லபா! தங்கள் இஷ்டத்தைப் பரிபூர்த்தி செய்ய யாதொன்றுந் தடையில்லை; ஆனால் இனி கா[illegible] செய்யப்புகுங் கல்வி காரியமாகச் சிலசந்தேகங்கள் நேர்ந்து பல தடவைகளிலும் தம்மைக்கேட்க சந்தர்ப்பமில்லாமற்போயிற்று ஆயினும் இப்போது ஞாபகம் வந்துவிட்டபடியால் தயைகூர்ந்து விவரித்துரைக்க வேண்டுகின்றேன் என்று வினவத்தொடங்கினள்; அதாவது—

கமலாக்ஷி:—ஏ சற்குணாகரா! சாதாரணமான பலவகை மிருக ஜாதிகளின் சம்போகவின்பத்துக்கும் மனிதர்களின் சம்போக வின்பத்துக்குமுள்ள தாரதம்யமென்ன?

தினகரமேனியன்:—ஏ காரணகக் கமலாக்ஷி! நீ கேட்ட கேள்விக்குத் தக்க உத்தரம் கூறுவதை மெத்தவும் கவனமாய்க் கேள். மிருகங்களைவிட மனிதனுக்குள்ள மேலான பகுத்தறிவினாலே அனுபவிக்கப்படும் சுகங்கள் பலவகையாக ஏற்பட்டும் அதனாலமையும் பல ப்ராப்திகளைத் தெளிவாயறிந்து அனுபவிக்கும்படிக்கு ஏதுவாக சாஸ்திரங்களும் மனிதனொருவனுக்கே ஏற்பட்டும் மிருகங்களுக்கு அஃதில்லாமையாலும் மிருகத்தைவிட மனிதன் எவ்வளவோ பங்கு அதிகமான சுகத்தை படைகின்றான்

கம:—நாதா! தாம் கூறிவந்ததைத் தலைமேற் கொண்டேன் ஆனால் மனிதர்களது சம்போகத்துக்கு ஏதோ சாஸ்திரமிருப்பதாகச் சொல்லி வந்தீர்களே அதென்ன?

தின:—ஏ அதிப்ரியை, ஆதிகாலத்திலே ஸ்ரீ கைலாசபதியும் பார்வதி தேவியாரும் ஒருநாள் ஏகாந்தமாயிருக்கும்போது மனிதர்களது சம்போக விஷயமாக சம்பாஷித்ததை அக்காலத்து மகாரிஷிகளறிந்து நம்மனோர் கடைத்தேறும்படி சாஸ்திரமாக எழுதிவைத்தார்கள். அவை வருமாறுகாண்க.

ஏ செந்தூரத் திலதம் வாய்ந்தநன்னுதலாய்! செப்புவன்கேள்: மாதர் போகமென்பது மற்றத்தொழில் முறைபைப்போல் ஒருவனாலும் தெரிந்துகொள்ளக் கூடாமையாலே அதன் நடவடிக்கைகளைப் பற்றிச் சாஸ்திர மூலமாகத் தெரிந்துகொண்டு தங்களது சொந்த மனையாளோடு மாத்திரம் போகம் செய்வது கிரமம்.

மாதர்களது பருவப்பெயர்.

கம:—மாதர்கள் இத்தன்னவிதமுடையவர்கள் என்பதைப்பற்றி தெரிவிக்கவேண்டும்.

கம: கற்பிற் சிறந்த காதலி! பெண்களுக்கு பாலே, தருணி, பிரௌடை, விருத்தையென்னும் நான்கு பருவங்களாம். அதாவது 16-வயதளவும் பாலையெனவும், அதன்மேல் 30-வயதளவும் தருணியெனவும், அதன்மேல் 55-வயதளவும் பிரௌடையெனவும், அதன்மேற்பட்டவர்களுக்கு விருத்தையெனவும் ஏற்பட்டுள்ளது இவர்களுள் பாலைப்பருவமுடைய பெண்ணையுடைய புருஷர்கள் இப்ப

[illegible] கார்த்திகை, ஆனி, ஆடி, ஆகிய இம்மாதங்களில் நறுமலர்சூட்டி, சந்தனக்குழம்பும் தாம்பூலமுங்கொடுத்து இனிய கனிவர்க்கங்களை அருந்தச்செய்து மனக்களிப்போடு கூடில் ஆடவனைப்பிரியாத அன்புடையவளா யிருப்பாள்.

தருணியையுடைய புருஷர்கள் மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய இம்மாதங்களில் அழகிய ஆடையாபரணங்களை [illegible]த்து மனதுக்கேற்றபடி கலவித்தொழில்செய்து சுகிக்கில் இடையறு விச்சையை யுடை[illegible] யிருப்பாள்.

பிரௌடையையுடைய புருஷர்கள் ஆவணி, புரட்டாசி, சித்திரை, வைகாசி ஆகிய இம்மாதங்களில் களிப்புடனே ஆலிங்கனம் செய்து சாஸ்திரவிதிப்படி சம்போகம் செய்திடில் என்றும் பிரியமா யிருப்பாள்.

விருத்தையைச் சேர்வது விழலுக்கிறைத்த நீரைப்போலாகு மாதலால் அவளிட மிணங்காமலிருப்பது உத்தமம். இவர்களில் பாலையைக் கூடியவர்கள் சரீரத்துக்குத் [illegible]மும் தருணியையும், பிரௌடையையும் கூடியவர்கள் சரசசல்லாபங்களால் சுகமெய்தி அதிக சந்தோஷத்தை யடைவார்கள். விருத்தையைக் கூடியவர்கள் யாதொரு சுகப்பிரயோசனமு மடையமாட்டார்கள்.

கட:—சந்தோஷம்; ஆனால் இவர்களோடு இராப்பகல் இந்த இரண்டு காலங்களிலும் எப்போது சேருவது சிலாக்கியம்.

மாதர்கள் போககால விளக்கம்-

இன:—இப்போது நமது காதுக்கெட்டிய வரையில் இத்தேசத்தவர்களி லநேகர் இராப்பகல் இந்த இரண்டு காலங்களிலும் நினைத்தபோதெல்லாம் போகிக்கின்றார்களெனத் தெரிய வருகிறது. அப்படிக் கூடுவது மிகவும் பிசகு பகலில் ஒருபோதும் புணர்ச்சி செய்யவே கூடாது. அதனாலுண்டாகும் தீங்குகள் அநேகம். அல்லாமலும் வீரத்தன்மை யில்லாமலும் அற்பா[illegible]யாயும் பிறந்து உலக நிந்தைக்கேற்ற கொடிய பாபியாயும்; இடையிடையே அபாய கஷ்டநஷ்டங்க ளடையப்பெற்று கடைசியில பிச்சையெடுக்கும்புத்திரனாய்ப் பிறப்பான். ஆகையால் போகத்துக்குரியகாலம் இராக்காலமேயாம்.

கம:—கற்றமிழ்கற்ற காவலா! அப்படியானுல் இரவில் எக்நேரத்தில் சேருவதுத்தமம்?

தின:—அறிவாற் சிறந்த ஆரணங்கே கேட்பாய்; இரவிலே சாதாரணமாக 5-நாழிகை யளவில் போஜனஞ்செய்தால் அது ஜீரணித்த பின்பே அதாவது 2-ம் சாமத்திலே போகத்துக்கு முயல வேண்டும். அவ்வாறின்றி போஜனம் ஜீரணமாவதற்கு முன்கூடின் அதனுல் அக்கினிமந்தம், பேதி, தலைநோய், குன்மம், வயிறுப்பிசம் இவை முதலியன உண்டாகும். தவிர வயிற்றிலுணவு ஜீரணமா காம லிருக்கும்போது கருத்தரித்துப் பிறக்கும்பிள்ளை அசுத்தமான வனும், கீழ் ஜாதியானைப்போல் நடவடிக்கை யுள்ளவனுயு மிருப்பான். நிற்க, நாலாம் சாமத்திலும் போகம்செய்யக் கூடாவாம். ஏனெனில் ஷை நாலாம் சாமத்திற் ப்ராதிகாலம்பிதுர்க்கள் காலமாதலானும் அதில்போக்சின் பிதுர்சாபத்தால் வம்சம் க்ஷீணிக்குமாதலானுமேயாம். இதனுல் இரவு நாலுசாமத்திலும் நடு இரண்டு சாமமே போககாலமெனவறிக.

கம:—வித்பன விவேகம்நிறைந்த எனது அருமைக்காதலரே! தாம்சொல்லிவர்த்தை இருசெவியிலும் ஏற்றுக்கொண்டேன். ஆனுல் மாதர்களின் ஜாதிப்பிரிவையும் பற்றிச் சிறிது செப்பிடல் வேண்டும்.

மாதர்களின் ஜாதியும் இலக்ஷணமும்.

தின:—இப்புவி புகழும் செப்புமேர் தனத்தாய், இயம்புதல் கேட்பாய், மண்ணுலகமாதர்களை மூன்றுவகையாய்ப் பிரித்து கூறப்படும். அதாவது பெண்மான் ஜாதி, பெட்டைக்குதிரை ஜாதி, பிடி யானை ஜாதி, என்பனவாம். இவைகளுள் பெண்மான் ஜாதியாள், சுருங்கி நெளிந்து சுருளும் கூந்தலும், கொவ்வைக் கனிபோன்ற இதழும், மானைபோன்ற மருண்ட பார்வையுடைய கண்களும், பெண்யானை நடையும், மின்னற்கொடிபோல் துவளுகின்ற இடையும், மகா தபசிகளும் மயங்கும்படியான பிரகாசமுள்ள முகமும்,

செந்தாமரையெனச் சிவந்தபாதமு முடையவளாயிருப்பாள், அல்லாமலும் புணர்ச்சியில் மிகத்தெளிக்கும் தாமரைமலர் மணச் சுரதநீரும் யானைத் துதிக்கைபோன்று திரண்டு பருத்த துடைகளும், பொற்கின்னம்போல் பிரகாசிக்கும் இருஸ்தனங்களும், கோபஞ்செய்வாசிடத்திற் பொருமையும், அழகிய நீண்ட கழுத்தும், குதலை மென்மொழியும் குறைந்த உண்டியும், மணங்கமழும் சண்பகமலர் போலும் சிவந்தமேனியை யுடையவளாயும் காணப்படுவாள்.

...ட்டைக்குதிரை ஜாதியாள், குவிந்தும் உயர்ந்துமுள்ள உச்சந்தலையும், நீண்ட கூந்தலும், பருத்த நீண்டமுகமும், தாமரை இதழ்போன்ற ...கண்களும், நெருங்காது இடைவெளி தோன்றும் வெண்பல்லும், நீண்டுசிவந்த உதடும், பெரியதோளும், மிகப் பருத்தமார்பும், ஒடுங்கிய வயிறும், தொண்டையாற் குழறிப்பேசும் வார்த்தையும், பணைத்துத் திரண்ட துடைகளும், அன்னம்போன்ற நடையும், ஆழ்ந்த உந்திச்சுழியும், போசனம் நித்திரை இவைகளிற் பிரியமும், தன் நாயகன்மேல் நீங்காத சிந்தையும் செம்பஞ்சுபோல் சிவந்த பாதமும் பொருந்தி பொன்னிறமேனியளாய்க் காணப்படுவாள்.

பிடியானை ஜாதியாள், நெற்றி, கன்னம், செவி, மூக்கு இவைகள்மிதமின்றி பருத்தும், குறுகிப்பருத்த கால்கைகளும், கெட்டியான தோள்களும், விம்மிய கழுத்தும், நெருங்கியிராத சாதாரணமான பல்லும் கற்றையாய்ச் சிவந்து சுருண்டிருக்கும் கூந்தலும் இராப்பகல் கல்வியிலேயே கவனமும்யானை வீறிடுவதையொத்த வார்த்தையும், பருத்துத் தொங்கிய உதடும், வீண்சண்டை செய்பவளும், ஒளிகுறைந்த கண்களும் முறையின்றி யாவரோடும் கூடுதலும் ஆகிய இத்தன்மையுடையாள்.

கம:—வீண்வாதம் பேசி நாள்முழுதும் போக்கும் விழலரைப் போலல்லாது இத்தனையுமறிந்து புத்தியிலுயர்ந்து விளங்கிய எ உத்தமகாதா? தாம் கூறிய யாவும் காதிற்கொண்டேன் ஆனால் இவ்வித மாதர்களைக் கூடுவதற்குக் காலவரை ஏற்பட்டிருந்தால் அதையும் அடியேனறிந்திடச் சொல்லவேண்டு...

மாதரைச் சேரும் வயத... விளக்கம்.

தின:—அமுத மொழுகுங் குமுதச் செவ்வாயுடை அன்னமே கேட்பாய், இப்போது நமது அநுபோகத்துக் கெட்டியவரை

யில் பெரும்பாலும் புருஷர்கள் 14-வயதுக்கு மேலும், பெண்கள் 12-வயதுக்கு மேலும் சம்போகத்துக்கு ஆரம்பித்து விடுகிறார்கள்; இதனால் சரீரம் அதிசீக்கிரம் கெட்டுவிடுவதோடு, அகால மரணத்துக்கும் ஆளாகிறார்கள். தவிர புத்திரோற்பத்தியும் உண்டாகிறதில்லை அப்படி யுண்டானாலும், தேரை, தேவாங்கு, எலிக்குஞ்சு என்னும் இவைகளைப்போன்ற துர்ப்பலதேகிகளாகப் பிறக்கும். இதையறிந்தே பெரியோர்கள் சற்றேறக்குறைய புருஷர்களுக்கு 22-25-வயசுக்குப் பின்பும், ஸ்திரீகளுக்கு 16-வயதுக்குப் பின்புமே புணர்ச்சி கூடுமென்றும், அப்படிக் கூடுவதால் பிறக்கும் பிள்ளைகளே மிக்க பலசாலிகளும், தீர்க்காயுளும், கோபிக்ஷாணமும் பெற்று திவ்விய தேஜஸோடு வாழ்வார்களென்றும் கூறியிருக்கின்றார்கள்.

கம:—எனது அன்பிற்கிசைந்து இன்பமது நல்கும் அற்புதப் பிரியா? அடியவட்கிரங்கி ஓதியதுணர்ந்தேன். மற்றும் மாதரிணக்கத்துக்கு யோக்கியமான நக்ஷத்திரங்களைப்பற்றிச் சொல்லி விளக்கிட வேண்டுகிறேன்.

இன்ன நக்ஷத்திரங்களில் மாதர்போகங் கூடாதென்பது.

தின:—மடவனம்போல் நடையபிலும் மாந்தளிர் மேனியாய் கூறக்கேள், அசுவனி, பரணி, கார்த்திகை, மிருகசீரம், திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், மகம், பூரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இந்த நக்ஷத்திரங்களிலும் மற்றும் அமாவாசை, பௌர்ணிமை, பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்த்தசி ஆகிய இந்த திதிகளிலும், வருஷப்பிறப்பு, மாசப்பிறப்பு, விரததினம், விரததினத்துக்கு முந்தின திதிய தினங்கள் தெவசதினம் இதற்குமுந்திய பிந்திய தினங்கள் சூதககாலம் யாத்திரைக்காலம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இக்காலங்களிலும் மாதரிணக்கம் கூடாவாம். ஏன்கூடாதெனில், மேற்கூறிய ஆகாத நாட்களில் கூடிப்பிறக்கும் பிள்ளைகள் கல்வி யறிவொழுக்கமில்லாமலும், துராசாரிகளாயும், ரோகஸ்தர்களாயும் பிறந்து வம்சவிர்த்திக் கேதுவில்லாமல் போய்விடுவதாலும், சத்புத்திரனே பிதுர்கர்மத்துக்கு உரியவனாதலாலும் அவ்விதமின்றி துன்மார்க்கத்துக் கேதுவான துர்ப்புத்திரர்களைக் கொண்டு செய்யப்படும் எவ்வித கருமமும் நஷ்டமாதலோடு வம்சமும், செல்வமும் நாளுக்குநாள் க்ஷீணிப்படையுமென்றும், பிரகஸ்பதி, மனு இவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

கம:—கன்னியம் நிறைந்த கனவாளா! தாம் கூறிவந்தது மெத்தவும் நியாயமே, நிற்க, தற்காலத்தவர்களில் சில மந்தபுத்தியினர் மாதவிடாய் ஸ்திரீகளிடத்து போகம் செய்துவருகிறதாகக் கேள்விப்படுகிறேன், அப்படிச்செய்வது கிரமமா? அதனால் நேரிடும் கெடுதியென்ன? கிருபைசெய்யும்.

விழுப்புக்காரிகளைச் சேருவதைப்பற்றிய விவரம்.

தின:—மயிற்சாயலும் குயிற்றொனியும் வாய்ந்த மங்கையே இங்கிதுகேள்! மாதவிடாய் வந்த இட்டுக்காரிகளிடத்து ஒருபோதும் சம்போகஞ்செய்யலாகாது, ஏனெனில் அவர்களுக்குரிய ருதுதினமாகிய 3-நாட்களில் முதனாள் சஸ்திரீக்கும், 2-ம்நாள் பிரமஹத்தி செய்தவனுக்கும், 3-ம்நாள் வண்ணாத்திக்கும் சமமாதலால் தான் இந்த மூன்றுநாளும் அவர்களை வீட்டுக்கு விலக்கமாகவே வைத்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் போகிப்பதானது மேற்சொல்லிய மூன்றுவித ஈனஸ்திரீகளைப் போகித்ததை யொக்குமாம். அல்லாமலும் விழுப்பான மூன்றுநாட்களில் முதனாள் கூடியவன் சண்டாளதோஷத்தையடைந்து ஆயுள்குறைந்து நாசமடைவான் 2-வதுநாளில் ரமித்தவன் பிரமஹத்தி தோஷமடைந்து மகாபாதகனாவதுமன்றி இருவருக்கும் ஆயுள் குறைந்துவிடும் 3-ம்நாள் ரஜஸ்வலையான ஸ்திரீயுடன் சேர்ந்தால் நாயகனுக்கு கிராமசண்டாளத்துவ தோஷமுண்டாகி, கெர்ப்பமும் நாசமடைவதோடு வேசிக்குணத்தையுடைய பட்டியாய்விடுவாள். இதன்றி புருஷன் பலவித கெட்ட வியாதிகளால் பீடிக்கப்பட்டு நாளுக்குநாள் இரத்தம் குன்றி சீக்கிரத்தில் எமபுரிக்கு எழுந்தருளியாய் விடுவான்.

கம:—மங்கையர்க்குரிய இங்கிதத்தோடு மறுமொழி புணர்த்த ஏ மகாவித்பன்! தாம் கூறியவை தக்கதென மிக்க மகிழ்ந்தேன். ஆனால் மேலே விலக்கப்பட்ட மூன்றுநாளும் போக, சுத்தமாகிற நாலாநாள்முதல் எத்தனை நாள்வரையில் மருவுதல் கூடுமென்பதையும் அதனால்பெறும் சந்தானங்களின் குணாகுணங்களையும் விபக்தமாக விளம்புதல்வேண்டும்.

ருதுக்காலசந்தான விவரம்.

தின:—காதளவோடிய நீண்ட கண்களையுடைய ஏ கட்டழகி புகல்வதை நன்றாய்ப் புத்தியிற் பதிப்பாய்.

சாதாரணமாக ஸ்திரீகள் வீட்டுக்கு விலக்கானது முதல் 16-தினங்களுக்கும் ருதுகாலமெனப்படும். இந்த 16-தினங்களுள்ளும் குற்றமான 3-நாளைத்தள்ளி சுத்தியான நாலாநாள் தொடுத்து 12-நாளுமே கருத்தரிக்கக்கூடிய முக்கிய காலமெனவறிக. மேற்சொல்லிய ருதுகாலத்திலே ஒவ்வொருவரும் தங்கள் மனைவியைச் சேரவேண்டுமென்றும் அப்படிச் சேராதவன் பிரமஹத்தி தோஷத்தையடைவானென்றும், ஆனால் காரியார்த்தமாய் ஊர்ப்புறம் போனவனையும் வியாதியால் பீடிக்கப்பட்டவனையும் மேற்படி தோஷம் அடையாதென்றும் பராசர்முதலிய ரிஷிகள் கூறியிருக்கின்றார்கள். ஆனால் அந்த 12-நாளிலும் குற்றமுள்ள நாளிற் கூடவொண்ணாது.

மாதவிடாய் நாளாகிய 3-நாளும் கழிந்து சுத்தமான 4-ம்நாளிலே ஸ்திரீபுருஷாளிருவரும் சேருவதால் கருத்தரித்துப் பிறப்பது பக்தி விஸ்வாசமுள்ள ஆண்பிள்ளையாகும், 5-வதுநாள் கூடிக் கருத்தரிப்பது வேசித்தனத்துக்கும் அவதூறுக்கும் பாத்தியப்பட்ட பெண்ணாய்ப் பிறக்கும். 6-வது தினத்திலே தரித்துப் பிறப்பது ஆண்குழந்தையாகும் ஆனால் அது தன் ஜீவகால முழுவதும் யாசகனாகி பிச்சையேற்கும். வறுமையுடையவனாவான். 7-வதுதினத்திலே தரித்துப் பிறப்பது பெண்குழந்தையாம், ஆனால் அந்தக்குழந்தையானது தனது பருவத்திலே தன்நாயகனைவிட்டு மறுபுருஷனைச்சேர்ந்துவாழ்வாள். 8-வது தினத்திலே கூடிக் கருவுற்பத்தியாகி வெளிவருவது ஆண்பிள்ளையாம். ஆனால் அக்குழந்தை தனது பருவத்திலே மகா பாக்கியவானாகவும் சிவபத்தியிற் சிறந்து எல்லாராலும் புகழப் பதம்பெற்றுவாழ்வான். 9-வது நாளிற் றரித்துப் பிறப்பது பெண்ணாகும். இந்தப் பெண்ணானது தனது பருவத்திலே தேவதா விஸ்வாசியாயும், கற்புநிலைதவறாது பரிசுத்தமான காரியங்களில் பிரீதியுள்ளவளாயும் பூரணாயுளோடு வாழ்வாள். 10-வது தினத்திலே தரித்துப் பிறப்பது ஆணாகும். ஆனாலந்த ஆண்குழந்தையானது தனது பருவமுழுவதும் குறையாத சம்பத்துடையவனாயும் சிரேஷ்டமான கெம்பீரனாய்ச் சுகவாழ்வெய்தி தன் நகரவாசிகளாலே மிகவும் மதியூக மந்திரியெனப் புகழப் பதம்பெற்று வாழ்வான். 11-வது தினத்திலே தரித்துப் பிறப்பது பெண்ணாகும். அந்தக் குழந்தையானது தனது பருவத்திலே தன் [illegible]க்குக் குறையாத சன்மார்க்கியாய் அதனால் கீர்த்திபெற்று தன்குலத்துக்கு மேன்மையுண்டுபண்ணிக் காலங்கழிப்பாள். 12-வது நாள் [illegible]

து பிறப்பது ஆணாகும் ஆனால் அந்தக்குழந்தை தனது பருவத்தி லே பிதாவுக்கு மேம்பாடுடையவனாயும் சிற்றின்பத்திலே பிதனாக பு த்தியுள்ளவனாயும் காணப்படுவான். 13-வது நாள் கலந்து கருவமை ந்து பிறப்பது பெண்ணாகும். அப்படிப்பிறக்கும் பெண் தனது பரு வத்திலே உண்மை பேசுபவளாயும் இனிய மிருதுவான குரலுள்ள வளாயும் கற்புக்கரசியாயும் மஞ்சளிக்க வெகுநாளிருந்து வாழ்வா ள். 14-வது நாள் தரித்துப் பிறப்பது ஆண்குழந்தையாம் ஆனால் அந்தப்பிள்ளை தனது பருவத்திலே தர்மம், நன்றி, ஆத்மஞானம், நல்லகுணம் என்னும் இவைகளோடு பெரியதோர் அதிகாரமும் பெற் றுவாழ்வான். 15-வது நாள் கூடிப்பிறப்பது பெண்ணாகும் இந்தப் பெண் தனது பருவத்திலே அதிரூபலாவண்ணிய முடையவளாய் அரசனுக்குப் பத்தினியாயும், அநேகம் பிள்ளைகளைப்பெறும் பாக் கியசாலியாயும் வாழ்வாள், 16-வது நாள் கூடிப் பிறப்பது ஆணாகு ம், ஆனால் இந்த ஆண்குழந்தை தனது பருவத்திலே வித்தை இலக் கணம், சத்தியம், பொறுமை, புலனடக்கல் என்பனவமைந்து சக லாகமபண்டிதனும் அநேகாண்டிப்பிழைக்க யோக்கியமாய் வாழ்வா ன் என்று இந்தவிதமாக யாக்கியவல்கியர் பாரத்துவாசர் முதலிய ரிஷிகள் தங்கள் ஸ்மிருதியிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

கம:—ஏ நாதா! தாம் செப்பிய யாவும் சிந்தையிற் கொண் டேன் ஆனால் இன்னொன்று, அதாவது உலகத்திலே மாதர்போக மென்பது மகா ரிஷிகளாலும் வெறுக்கமுடியாது மதிமயங்கித் தம் ள் அரிய தவங்களெல்லாம் அடியோடுதொலைத்து விழிக்கின்றார்க ளென்று பலகதைகள் சொல்லிவருவதைப்பார்த்தால் அது மிக அ சாத்தியமாக ஏற்படுகின்றதே! தாங்கள் கூறும் சாஸ்திரப்படி நட க்க முடியுமோவென சற்றே சந்தேகிக்கின்றேன். ஆயினு மிருக்கட் டும். மாதவிமான்றுக்கு இத்தனை முறைதான் சம்போகம் கூடுமென் சாஸ்திரமுண்டோ?

இன:—கச்சறுத்து சபளச்சேரணிந்து முத்துவடந் தாங்கி இ றுமாந்து மேனோக்கிக் கண் கறுத்து அடி கனத்து வட்டமிட்டு நே மற்படர்ந்து பூரித்து புளகித்து இழை நுழையாது நெருங்கி த ன்னென்று இடையைத் தள்ளாடச்செய்யும் அதிசுந்தர கொங் கையுடையவளே! கூறுவேனென்றுகேள், உலகத்திலே மனிதராய்ப் பிறந்தவர்களில் மாதர்போகத்தில் மயங்காதா ரொரு வருமில்லையாதற்கனுதாரணமாக:—

உள்ளினுஞ்சுட்டிடு முணருங்கேள்வியிற்
கொள்ளினுஞ்சுட்டிடுங் குறுகமற்றதைத்
தள்ளினுஞ்சுட்டிடுந் தன்மையீதினாற்
கள்ளினுங்கொடியது காமத்தீயதே.

ஊருளெழுந்த வுருகெழுசெந்தீக்கு
நீருட்குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ்சுடுமேகுன்றேறி
யொளிப்பினுங் காமஞ்சுடும்.

என்னுமிந்த இரண்டுபாட்டாலும் காமம் தீயினுங் கொடியதென்று ஏற்படுகின்றது. ஆயினும் ஆகாரத்தில் அபேக்ஷையுள்ள ஒருவன் அபரிமிதமான போஜனத்தையாவது அல்லது அடிக்கடியாவது புசிக்கவியலாது, எவ்வளவு கிரமமோ அவ்வளவு [illegible] அதிகப்படின் அதுவே அவனைக்கொல்ல வேதுவாம். அது[illegible]ண்டே அளவுக்கு மிஞ்சிய அமுதமும் விஷமதென்றார் ஆன்றோர் புசிக்கப்படுவதானாலும் சரியே, அநுபவிக்கப்படுவதானாலும் சரியே, எவையும் மிதமாகவே வைத்துக்கொள்ளவேண்டும் கரும்பு ருசியென்று கட்டுக்கட்டாய்த் தின்னவொண்ணாது போல மாதரின்பம் சகத்துக்கெல்லாம் முதன்மையதாயினும் அதன்[illegible]ல் அடிக்கடி அநுபவிக்க முயலுபவர்கள் பலவித கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு அதிசீக்கிரம் மரணத்தையடைய ஏதுவாகுமென்றே மாதமிருமுறை மாதரைத்தழுவுதல் வேண்டுமென மதிநூலிகள் கற்பித்துளார்.

மருவுநாள் மாதத்துக் கித்தனையென்பது.

இப்போது இத்தேசத்த[illegible]ர்களி லநேகர் சதா காமுகர்களாய் "பாழும் பகற்போதுபோய் நள்ளிருள் எப்போது நம்மைநாடுமோ" வெனும் ஒரே ஏக்கமான ஞாபகஸ்தர்களாய் ஓர் தினமுந் தவறாது புணர்ந்து மயங்கி வாடி வதங்கி தேகவலுவற்று வாழ்நாட் பெருக்கை வீணைச் சுருக்கிப் பித்தினர் தமையும் உத்தமராக்கிடும் பேதை மதியினரை என்னென்று சொல்வது! அய்யோ பாவம் இதுமட்டோ! மருநாளிரவு வருமோ வராதே வெனும் அய்யுறவால் ஒருநாளிரவில் இருமுன்றுதரமும் உழைக்காதுழைத்து ஓடாய்ப் போகின்றார்கள். பரிதாபம் பரிதாபம். சாதார[illegible] சாஸ்திரீயமாகவும் "திங்களிருமுறை யிங்கிதமாக தன் மங்கையை மருவலே மாண்பதுவாகும், மாதமும்முறை மத்திமமாகும், வார[illegible]முருமுறை

அதமமதாகும், அதன்மேற் புணர்பவர்க்களவில்லை பிணியே" என்று ஏற்பட்டிருத்தலால் கூடுமானவரையில் அவ்விச்சையை மறந்து மாதமொன்றுக்கு இருமுறை மும்முறைக்கு மேற்படாம லிருப்பதே அறிவாளிகளின் முக்கியதன்மையாம்.

கம:—முக்கனிச் சுவையினும் மிக்க நன்மொழியோய்! நாம் மேலே கூறிவந்ததெல்லாம் வெகு நியாயமாகவே தோன்றுகிறது. ஆயினும் அதிகமாகப் புணர்வதால் ஏதோ அனேக கெடுதிகள் சம்பவிக்கு மென்கிறீர்களே அதைச்சற்றே எனக்கு விவரமாக விளக்க வினயத்துடன் வேண்டிக்கொள்கிறேன்.

அதிகப் புணர்ச்சியால் வருமபாயம்.

தின:—எனது சீர்குணநிதியே! சாற்றிடக்கேளாய், ஒருவன் மிதமின்றி போகஞ் செய்வானுயின் அதனுல் அதிகமானவிந்து வெளியாகின்றது. அது வெளிப்படவே அதற்கு முதற்காரணமாகிய இரத்தம் குறைகின்றது; அது குறையவே அதற்காதாரமாகிய ஜீவாக்கினி குறைகின்றது, அது குறையவே தேகவுருப்புகளின் சுபாவத்தொழில் கெட்டு அதனுல் தேகம் கலகலக்கப்பட்டு பின்பு பட்டில்லாத கெட்டவியாதிகட் பட்டு நஷ்டமடைய நேரிடும், அதாவது பயித்தியம், புத்தித்தெளிவின்மை, காமாலை, க்ஷயரோகம், நீரிழிவு, அக்கினிமந்தம், மெய்வாய் கண் மூக்குச்செவி இவைகளின் உணர்ச்சி பேதம் ஆகிய இவைகள் நிச்சயமாய் வருமெனவறிக.

மனிதனுக்கு சுக்கிலமென்ற வீரியமானது எல்லாவித அங்கவுருப்புகளிலும் தசை, எலும்பு, இரத்தம், நரம்பு, கொழுப்பு, மூளை; ஆகிய இவைகளுக்கு மேலான அருமையும் ஆதாரமுமாயிருப்பதோடு ஜீவமணியா யேற்பட்டிருக்கின்றது. விந்து விட்டான் நொந்து கெட்டான் என்ற மூதுரைப்படி வீரியத்தை அதிகமாகக் கழிப்பவன்தேகம் அதிசீக்கிரமாக காரசாரமற்று தேகத்தின் பலங்குன்றி நடைப்பிணமாய்த்திரிவதை நாம்பார்த்தும் வருகின்றோம். நம் தேக இரத்தத்தில் சுத்த இரத்தம் 80-துளிக்கு ஓர் துளிவிந்து விளைகின்றது, அங்ஙனமாயின் ஓர் தடவை வெளியாகும் விந்துவுக்கு எவ்வளவு இரத்தம் முறிந்திருக்கவேண்டும்? இதை நம்நாட்டுச் சகோதரர்கள் சிறிதும் உணர்வதில்லை. ஓர் தடவை வெளிப்படும் வீரியத்துக்கே இவ்வளவு இரத்தம் குறையுமானுல் தினத்து

க்கு 2, 3, முறை போகிப்பவருக்கு இவ்வளவு இரத்தம் குறையுமென்பதை அவரவர்களே அறியவேண்டும்.

சுக்கிலம் தடித்துப் பிசின்போ லிருந்தால்தான் சந்தான விருத்திக்கு ஏதுவாகும்; நீர்த்தாவது தெளிந்தாவது தன்னியற்கை கெட்டுவிடுமேல் பிரயோசன மற்றதாகும். தவிர விந்துவிளைவிற்கு நாம் உட்கொள்ளும் ஆகாரமும் அவ்வாகாரத்தைச் சீரணிக்கச் செய்கிற உள்ளுறுப்புகளின் சத்தியுமே காரணமாயிருக்கின்றது நெய், பால், மாமிசம், உளுந்து கடலைமுதலிய புஷ்டியைத் தரத்தக்க உணவுகளை காலத்தருந்தி சீரணித்துக் கொள்பவருடைய சுக்கிலம் பலமும் புஷ்டியுமா யிருக்கும். அப்படிக் கெட்டிப் பட்டாலொழிய சம்போகத்தி லின்பமும் வியாதியற்ற பலமான சந்ததியுமுண்டாகா தெனவறிக.

கம:—ஏ நாதா! தாம் தயவுடன் கூறிவந்தவைகளையெல்லாமறிந்தேன். இனி உத்தமமான சற்புத்திரரைப் பெறவேண்டிய கிரமத்தைச் சிறிது சிரமத்தைப் பாராட்டாது செப்பக் கிருபை செய்வீராக.

சற்புத்திரோற்பத்தி விளக்கம்.

தின:—இங்கிதம் நிறைந்த மங்கையர்க் கரசியே இயம்புதல் கேட்பாய். நாயக நாயகிகளிருவரும் போககாலத்தில் கூடியவளையில் அறிவு மன முதலியவைகள் ஒத்துப் பரிசுத்த முடையவர்களாயும் சர்வவல்லமையுள்ள கடவுளிடத்து பயபக்தி விசுவாசமுள்ளவர்களாயும், நல்ல சந்ததியைத் தந்தருளும்படி பிரார்த்தித்தவர்களாயு மிருத்தல்வேண்டும். அப்படியிருப்பின் அழகும் பலமும் நன்னடக்கையும், தீர்க்காயுளும் உள்ளனவாய்ப் பிறக்கும். அவ்வாறின்றி கெட்ட மனதோடு அதாவது ஸ்திரீயின் மனம் ஒருவிதமும் புருஷன் மனமொரு விதமுமாய் வேறுபட்டு விகாரரூப தோற்றங்களை மனதில் வைத்தவர்களாயு மிருந்து, கோரம், பயம், கோபம், மனமயக்கம், கூச்சம், துர்ச்செய்கை முதலியவைகளுடையவர்களாயின் அவர்களுக்குப் பலவீனமும், அற்பாயுளும், துர்க்கீர்த்தியும், குரூபமுமான சந்ததியே யுண்டாகுமெனக் கண்டிப்பாய் அறியவும். இதற்குச் சாக்ஷியாக திருதராட்டிரன் குருடனாகவும் பாண்டு வெண்ணிற முடையவனாகவும் பிறந்ததற்குக் காரணம்வருமாறு.

திருதராட்டிரன் தாயானவள் வியாசருடன் போகிக்கும்போது அதிக கூச்சத்துடன் கண்ணை மூடிக்கொண்டதாலும்; பாண்டுவின் தாயானவள் அச்சத்தால் மனம் வேறுபட்டு உடல் வெளுத்து அலைந்தபோது கூடியதாலும், மேற்படி உருவங்களை, அடையப்பெற்றார்களென்று பாரதத்தில் பார்க்கலாம்.

இதற்கிணங்க தற்காலத்தில இந்தியா, அமெரிக்கா, அரேபியா முதலான தேசங்களில் குதிரைகள் புணரும்போது அவற்றிற்கெதிரில் நல்ல பலமும் அழகும் பொருந்திய குதிரையை நிறுத்தி வைத்து அப்போது கருத்தரித்துப் பிறக்குங் குட்டிகளும் எதிரில் நின்ற குதிரைகளின் அங்க அடையாளங்களைப் போலவே பிறக்கின்றன. இன்னும் பூஸ்டின் என்னும் பட்டணத்திலே கெர்ப்ஸ்திரீ ஒரு கிளியினால் பயமுறுத்தப்பட்டு அந்தப்பயம் அவளுக்குப் பிரசவகால பரியந்தம் இருந்தமையால் பின் அவள் பெற்ற பிள்ளை மேற்படி கிளியின் பேச்சு நடவடிக்கைகளையே ஒத்திருந்ததாம்; ஆகையால் இருவர்களும் நல்ல சந்தோஷத்தோடிருந்து [illegible] முடித்தால்தான் உத்தம புத்[illegible]டாகுமென தெளிவாயறியவேண்டும்.

கம:—கன்னலினுங் கனிந்த [illegible]சொற் காதலா! தாம் இதுவரையிலும் எடுத்துக்கூறிய யாவும் அறிந்தேன். இனி ஸ்திரீ புருஷா ளிருவரும் மருவிடும் கிரமத்தைச் சிறிது கிருபை செய்ய வேண்டும்.

மங்கையை மருவும் இங்கித கிரமம்.

தின:—ஏ முழுமதி முகத்தாய்! மொழிவதைக் கேளாய், புணர்ச்சிக்குரிய நாயக நாயகி யிருவரும் இரவிலே போஜனம் செய்த பின்பு வீட்டிலாவது வெளியிலாவது சிறிதுநேரம் உலாவிக் கொண்டிருந்து பிறகு சயன அறையை யடைந்து படுக்கையைச் சுத்தப்படுத்தி அதன்மே லிருவரு மிருந்து கொண்டு தங்களா லியன்றவரையில் கெட்ட எண்ணம், கோபம், பயம் முதலியவைகளை நீக்கிச் சந்தோஷ சித்தர்களா யியன்ற வரையில் ஆடையாபரணாதிகளா லலங்கரித்துக்கொண்டு வாசனைத் திரவிய மணிந்து பரிமளமான நறுமலர் சூடித் தாம்பூலந் தரித்துக் கொஞ்சமேனும் வேறு ஞாபகமில்லாமல் சரசசல்லாபத்திற்கும் காமவிரகத்துக்கும் ஏதுவான நல்ல கதைகளையும் பேசவேண்டும்.

அப்படி பேசும்போது நாயகன் மனைவியினது முகத்தையும், நாயகி நாயகனுடைய முகத்தையுந் தவிர வேறொன்றையும் பாரா மலும், ஆலிங்கனாதி செய்கைகளால் மனைவிக்குக் காமவிகாரத்தை மூட்டவேண்டும் அவ்வாறு காமவிரக முண்டானதற் கடையாள மாக கண்கள் சிவந்து சோராமலும், வார்த்தை குளறலும், மோகவ மூகை தோன்றலும், தனங்கள் விம்முதலும், பரவசமாக மயங்கிப் புருஷனை ஆசையோடு அணையவருவதலுமாகிய தருணத்திலே நாய கன் அதிக சந்தோஷத்தோடு கூடிக் கலவியை முடித்துப் பின்பு இருவரும் கூடிய வரையில் சுத்தி செய்துக்கொண்டு ஏதேனும் உட் கொள்ள பிரியமிருப்பின் பின்னால் கூறுவதை யறிந்து உட்கொள் ளலாம்.

கம:—ஏ புத்தியிற்சிறந்த உத்தமா! தாம் கூறிவந்ததில் ஸ்திரீ புருஷாள் மருவியபின்பு அருந்தக் கூடியவை அருந்தக்கூடாதன எவை? அவைகளைப்பற்றி வெளிப்படையா விளங்கவைப்பீர்.

பு[illegible]க்குப்பின் அருந்துவதைப்பற்றி.

இன:—இப்போது நம் ச[illegible]சியர்களில் பெரும்பாலார் சம் போகத்துக்குப் பின் தண்ணீர் அல்லது குளிர்ந்த பானங்கள் செ ய்து வருகின்றார்கள்: அப்படிச் செய்வதால் பட்சவாதம், முகவா தம், ஈரல் நடுக்கம் முதலிய நோய்க ளுண்டாகும். எவ்வாறெனில் போகத்தினால்; ஜீவாக்கினி குறைந்து காமாக்கினி அதிகரித்து தே கவுறுப்புகளுட் சில சூ[illegible]றி காய்ந்த இ[illegible]ம்பில் விடப்பட்ட நீர் கோஷிப்பதைப் போலவும், நன்கு யுலர்ந்த சருகில் தீப்பற்றுவதைப் போலவும் உள்ளுறுப்புகளுக்குச் சூடேறி மேற்சொல்லிய ரோகங் களைக் கிளப்பி அவதிக்குட் படுத்தும்; ஆகையால் அஃது ஒரு போதுங் கூடாவாம். அப்படி ஏதும் அருந்த மனமிருந்தால் நன் றாய்க் காய்ச்சிய பசுவின்பாலில் சுத்திசெய்த தேன் சிறிது கலந்து சாப்பிட, காமச்சூட்டோடு தேகச்சூடும் தணிந்து சரீராரோக்கியத் துக் கேதுவாதலோடு நல்ல சுபுத்திர வுற்பத்தியு முண்டாகுமென வறிக.

கம:—எனது ஆசை நேச! தாம் இதுவரையிலும் கூறியதெல் லா மறிந்தேன் தற்காலத்திலே அநேக குடும்ப ஸ்திரீகள் தங்களுக் குக் கிரமமா யேற்பட்ட சொந்த புருஷனை விட்டு அன்னிய புருஷர் கள்மேல் ஆசை கொண்டு தனக்குறிய பிதா மாதா பிள்ளைகள் முத

லானபந்துவர்க்கங்களையும் இழந்து வியபிசாரத்துக்கு ஆரம்பித்து விடுகிறார்களே அதன்காரணமென்ன? அருள்செய்யவேண்டும்.

தின:—எனது அற்புதக் குயிலே! சொல்லி வருவேன்கேள்: நம் தேசத்தவர்கள் பிள்ளைக்குப் பெண்தேடும் விஷயத்தில் அவரவர்களில் சிலர் தங்களது அந்தஸ்துக்குச் சமதையான அந்தஸ்தையும், சிலர் அழகையும், சிலர் கல்வியையும், சிலர் உத்தியோகத்தையும், சிலர்கால்வழியையும், சிலர்மேலினத்தையும் சிலர்சம்பத்தையுமாத்திரம் உத்தேசித்து விவாகத்தை முடித்து விடுகிறார்கள். சாதாரணமாக ஸ்திரீ புருஷர்களை நான்கு ஜாதிகளாக முன்னோர்களாலே பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, புருஷர்களில் உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம், இனவும் அதே பிரகாரமாக ஸ்திரீகளிலும் நான்கு வகுப்பாகப் பிரிவினை செய்திருக்கிறார்கள். இந்த ஆண் பெண்ணாகிய இருபாலாருள்ளும் ஜாதிவித்தியாசமாக அதாவது உத்தமஜாதிப் புருஷனுமாக ஏற்பட்டு விடுகிறதாலேயே ஸ்திரீ புருஷாளுக்குள் ஒருவித சுகபோக ஒற்றுமையில்லாமல் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து அன்னிய சம்பந்தம் செய்ய[illegible]ட்டு விடுகிறார்கள்.

கட:—பொறுமையிற் சிறந்த அருமை நாயக! தாம் புகன்றனவுணர்ந்தேன். இப்போது கூறிய விஷயங்களில் ஸ்திரீ புருஷர்களின் ஜாதி நான்கைப்பற்றிய சமஸ்த வரங்களையும் தெளிவாய்க் கூறிவரப் பிரார்த்திக்கிறேன்.

நான்குவித புருஷ ஜாதிகளின் இலக்ஷணமும் குணமும்.

தின:—வாள்விழிமாதேகேள் தவறாதே! முதலாவது உத்தம ஜாதிப் புருஷனானவன், உயரத்தில் நடுத்தரமும், நல்ல சுந்தரமான முகமும், பரிசுத்தமும் மாதா பிதா குருதெய்வம் இவர்களிடத்தில் விசுவாசமும், கிருஷ்ணமூர்த்தியைப்பற்றிப் பேசுவதில் பிரியமும், அன்னியர் மனைவியை அன்னையென நினைப்பதும் சாந்தம் பரோபகாரம் மரியாதை இவைகளோடு பெருந்தோரணையான வார்த்தையும், நீண்டு கறுத்ததலைமயிரும் உண்மையும், தணிந்தகுரலும், மிருதுவான தாமரைப்பூ வாசனையுடைய தேகமும், சிவந்தகண்களும் முத்தைப்போன்ற தந்தவரிசையும், குறைந்த போஜனமும், நிறைந்த செல்வமும் போகத்தில் சொற்ப பிரியமும் உள்ளவனும் விளங்குவன். இவனை முயற்சாதி யென்றும் சொல்வதுண்டு.

இரண்டாவது மத்திமஜாதிப் புருஷனானவன் பெருத்த அங்கமும், குளிர்ச்சியான தேகமும், விரிந்த மார்பும், புன்சிறிப்பமைந்த உதடும், குதித்த நடையும், அதிக போஜனமும், இராப்பகலில் சங்கீதப் பிரியமும், தேவாலயப் பணிவிடையும் விருந்தினருபசரிப்பும், கடினமான சித்தமும், அந்தணர் விசுவாசமும், தாய் தந்தையரிடத்துப் பிரியமு முள்ளவனுவான். இவனுக்கு மான் ஜாதிப்புருஷனென்றும் சொல்வதுண்டு.

மூன்றாவது அதமஜாதிப் புருஷனானவன், சிறிய கால்களும் நீண்ட நாக்கும், பாக்கு வாசனைத்தேகமும், பெருந்திண்டி தின்பதும், பலமான சரீரமும், ஸ்திரீகளை அடிக்கடி பார்க்கப் பிரியமும் வெட்கமற்றவனும், தெய்வபக்தி யற்றவனும், பாவ காரியத்தில் பழக்கமும் யோகத்தி லழுந்தியும், சதா போக இச்சையும், குறைந்த நித்திரையும், விசாலமான நெற்றியும், அழகிய கழுத்தும், நீண்ட கைகளும், மந்தநடையும், தாகப் பிரியமும், தைரிய மனசும், பிரிய சம்பாஷணையும், மெத்த பசியும், கூச்சமின்மையும், பாலிய சுகமும், தன்னைக்கண்டு ஸ்திரீகள் பிரியப்படநினைப்பவனும், ஆகிய இவையெல்லாம் பொருந்தியவனும்: இவனுக்கு ரிஷபஜாதிப் புருஷனெனவும் பெயருண்டு.

நான்காவது அதமாதமஜாதிப் புருஷனானவன், கருத்தமேனியும், தெய்வபக்தி யென்பது இனைத்தனையு மில்லாமையும், வேகமான நடையும், [illegible]த்தசரீரமும், காமவிரகத்தால் தேகத்தைக்கெடுத்துக் கொள்ளுதலும், [illegible]த்தனமும், மிகக் கெட்ட நடவடிக்கையும்; காமவெறியால் எவளானாலும் கலக்கப் பிரியப்படுதலும், பெரியோர் வார்த்தையைத் தள்ளித் [illegible]ன் வார்த்தையை மேலாகப் பேசுவதும், வெளிப்படையாய்ப் பேசுவதும், தரித்திர[illegible]யும், சஞ்சலமான மனசும், உதடு, பற்கள், காது இவை நீண்டும், கோணற் பார்வையும், ஆகிய இத்தகைய குணதிசயங் கூடினவனும், இவனுக்கு அசுவஜாதிப் புருஷனென்றும் சொல்வதுண்டு.

கம:—எனது பிராணாகந்தா! தாம் இயம்பிய நால்வகைப் புருஷலக்ஷணமுங் கேட்டு மிகவியந்தேன். இனி நான்குவித ஸ்திரீகளின் இலக்ஷணங்களையும் விவரித்துரைக்கப் பிரார்த்திக்கிறேன்.

நான்குவித ஸ்திரீஜாதிகளின் லக்ஷணமும் குணமும்.

தின:—எனது ஆணிப்பொன் மேனியாய்! முதலாவது உத்தமஜாதி ஸ்திரீயானவள் மகா பதிவிரதையும், தெய்வ பக்தியும்,

மான்விழியும், கோகிலத்தொனியும், செந்தாமரை மலர் வாசனையும், அன்னநடையும், கிளிமொழியும், கொடியிடையும், புன்னகையோடு கூடிய சந்திரமுகமும், சொகுசான ஆகாரத்தில் அற்பமாக அருந்துதலும், கொவ்வையிலும் செவ்வையாய்ச் சிவந்த அதரமும் தித்திப்புப் பதார்த்தங்களில் பிரியமும், வெண்ணிற வஸ்திரமும் வெண்மையான புஷ்பமும் அணிந்துகொள்பவளும், தாமரையிதழ் கண்ணும், எள்மலர்போன்ற நாசியும், இழை நுழையக்கூடாது நெருங்கிய இருஸ்தனங்களும், நீண்ட கூந்தலும், ஒற்றைநாடித்தேகமும் நல்லசுபாவமும், ஆடல் பாடல்களில் ஆசையும், அதிருபமுமுடைய செண்பகமேனியளாய் விளங்குவள் இவளுக்குப் பத்மினியென்ற ஓர்பெயருமுண்டு.

மத்திம ஸ்திரீயின் இலக்ஷணமும் குணமும்.

சாதாரணமான அழகும், உறுதியான எண்ணமும், உண்மையான வார்த்தையும், நன்மையான நடத்தையும், மாதா பிதா குரு தெய்வம் இவர்களிடத்து விஸ்வாசமும், பதிவிரதா தர்மத்திலூன்றுமனமும், போகத்தில் சொற்ப பிரியமும், இன்சொல்லும் பாவச்செயலில் மனமில்லாதவளும், நடுத்தர உயரமும், சரசமான வார்த்தையும், கூர்மையான மூக்கும், மிருதுவான சரீரமும் அழுத்தமாய் நெருங்கிய இருஸ்தனங்களும், நீண்ட கண்களும், யாவர் மனதையும் கவரத்தக்க நயத்தின வார்த்தையும், சிற்றின்பக் கதைகளில் இஷ்டமும், மூன்று ரேகைக[illegible] கண்டமும், * காடாலிங்கனத்தில் மெத்தப் பிரியமும், புளிப்பான பதார்த்தங்களில் மெத்த விருப்பமும், விசித்திர வஸ்திரமணிய ஆசையும், வாசனைத் திரவியங்களால் மிக்க அபேக்ஷையும், சுருட்டையமயிரும் சொகுசாய் அலங்கரித்துக் கொள்ளுபவளுமானவள். இவளுக்கு சித்தினிஜாதி ஸ்திரீயென்றும் ஓர் பெயருண்டு.

அதமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணமும் குணமும்.

மிருதுவாய் நீண்ட அங்கமும், சதா பசியும், அண்டமுகட்டை யெட்டும்படியான நகைப்பும், பிறர்க்குத் தீங்குசெய்யப் பிரியமும், சிற்றின்ப ஆசையைத் தூட்டும்படியான புன்சிரிப்பும், அன்னிய புருஷனைச் சேர்ந்து சுகிக்க ஆசையும், கெட்ட வார்த்தையிலேயே இஷ்டமும், தனது மாமி நாத்தி முதலியவர்களை அலக்ஷியம் ப

---

* காடாலிங்கனம் - கட்டித்தழுவுதல்.

ண்ணுதலும், உயரமானவளும், சாதாரண சௌந்தரியமும் சிவப்புவஸ்திரம் சிவப்பு புஷ்பம் இவைகளில் பிரியமும், உஷ்ணசரீரமும் கடைக்கண் பார்வையும், புருவத்தில் அதிகரோகமும், அடிக்கடிகோபமும், ஆகிய இவைகள் பொருந்தியவளா யிருப்பாள் இவளுக்கு சங்கினி என்றோர் நாமமுமுண்டு.

அதமாதமஜாதி ஸ்திரீயின் இலக்ஷணமும் குணமும்.

கெட்ட வழக்கங்களில் விருப்பமுள்ளவளும், தடித்த தேகத்தை யுடையவளும், பரட்டைத்தலையும், புன்னகையுதடும், சிவந்த கண்களும், அதிகமாய், நீண்டுபருத்த கொங்கைகளும் சிற்றின்ப ஆசையைத் தணித்துக்கொள்வதில் நாணமற்றும், காமவெறியால் புருஷர்களை ஆலிங்கனஞ் செய்ய ஆசைகொள்ளுதலும். நீண்டகால் விரல்களும், சிறுத்த கழுத்தும், காரபதார்த்தங்களிலும், உப்புப் பதார்த்தங்களிலும் பிரியமும், கடினமான மனதும், நீண்டபருவமும், செத்தாலும் போகாத கற்றாழை நாற்றமும், தன்னைப் புகழ்பவரிடத்து ஆசை கொள்வதும், உரோமம் நிறைந்த தேகமும், பயத்தைக் கொடுக்கும்படியான நகைப்பும், சொரசொரப்பான தோலும், பருத்த தொந்தியும், பூனைக்கண்களும் பொருந்தி யிருப்பாள். இவளுக்கு அத்தினி ஜாதிஸ்திரீ யென்னும் ஓர் பெயருமுண்டு.

கம:—நாதா! தாம் இதுவரையில் கூறிவந்த நால்வகைஜாதி ஸ்திரீகளின் குணாதிசயங்களை அறிந்தேன். இனி சம்போகம் செய்யக்கூடாத சமயங்களைப்பற்றி எனக்கு எடுத்தோதப் பிரார்த்திக்கிறேன்.

சம்போகங்கூடாத சமயவிளக்கம்.

இல:—கமனி[illegible]னே! நீ கேட்ட கேள்விக்குத் தக்க உத்தரம் வருமாறு காண்க: ஸ்திரீ சம்போகஞ்செய்ய ஆசைகொண்ட புருஷர்கள், தாங்கள் உண்ட உணவு ஜீரணமாகாமல் மந்தப்பட்டிருக்கும்போதும், வாந்தி செய்த பின்பும், சிரமமாக நித்திரையின்றி குறைவுபட்டிருக்கும்போதும், யாதாமொரு விஷயத்தைக்குறித்து வியாகூல சித்தமா யிருக்கும்போதும், சாராயம், கள், கஞ்சா முதலான லாகிரி வஸ்துக்களை பருகி மதிமயங்கி யிருக்கும்போதும், காரியார்த்தமாய் வெளிப்புறம்போய் வந்து களைப்பா யிருக்கும்போதும், கடும் பசியாயிருக்கும்போதும், தேகம் அதிக குளிர்ச்சியா

யும் அல்லது சூடாயிருக்கும் போதும், அதிக வேர்வைக்குப் பின்
னும், விஷக்காற்று வீசும் சமயங்களிலும், தலைநோய் சுரம் முதலி
ய ... கட்பட்ட போதும், சூலை குன்மம் நீரிழிவு தேக தாப்ப
முதலிய நோய்கள் தொந்தப்பட்ட சமயங்களிலும், எண்ணெய்
ஸ்நானத்தன்றும், க்ஷவரம் செய்துகொண்ட தினத்திலும் ஒருபோ
தும் கூடாதென வறிக.

கம:—நாதா ! தாம்கூறிவந்தது மெத்த குணமானவையே, நி
ற்க, இன்னும் சம்போகத்துக்கு விலக்கப்பட்ட ஸ்திரீகளைப்பற்றி
வெளியிடவேண்டுகிறேன்.

இன்னமாதர்களிடம் சம்போகம் கூடாதென்பது.

தின:—விதவை, விவாகமாகாத கன்னிகை, அயலான் மனைவி
விழுப்புக்காரிகள் ஆகிய இவர்களிடத்து செய்யும் திருட்டுத்தன
மான போகமுங்கூடாவாம்; ஏனெனில், இவர்களிடத்து செய்வது
குற்றமென்று தெரிந்திருந்தும் ஏதோ தங்களது விரகதாபத்தாலு
ம் மூடத்தனத்தாலும் போகிக்க ஆரம்பிக்கினும் அந்த சமயத்தி
லே எவர்களாவது வந்து விடுவார்களோ என்ற பயத்தினாலும், கர்
ப்பம் தரித்துவிடின் மானம் போய்விடுமே என்ற பயத்தினாலும், ஆட
வனுக்கு விந்து வெளிப்படும் சமயத்தில், ஸ்திரீயை விட்டு நீக்க
நேரிடுவதாலும் அவ்விந்து இந்திரியக் குழலிலும், நீர்த் துவாரத்தி
லும் தங்கி பெருப்பாலும் சிறு நீர்கட் ... எரிச்சல், அரையாப்பு,
... ண்டவாதம் நீரடைப்பு முதலிய ரோக அதிகரிப்பால் அவதிப்பட
நேரிடுமாதலால் இவர்களிடத்தும், இன்னும் தன் வயதுக்கு முதிர்
ந்த வயதுள்ளவர்களிடத்தும் கிழவிகளிடத்தும் போகம் செய்வது
கருகன்பதை யொக்குமென வறிக. எங்ஙனமெனில், ஷை யார்களி
ன் மர்மஸ்தான உட்கருவியானது புருஷனுக்கு சகோதயமாகும் ஸ்க
லித காலங்களில் (மாம்பழத்தை யுருஞ்சி அதன் ரசத்தை இழுப்
பதுபோல) விந்து முழுவதையும் இழுத்துக் கொள்ளும் சுபாவ
குணமுடையதாதலாலும், அதனால் விளையும் ரோகம் அளவிடக்கூ
டா தாகையாலும் மேற்கண்டவரிடத்து ஒருபோதும் புணர்ச்சி
கூடாதெனவறிக.

கம:—நாதா ! தாம் இதுவரையிலும் கூறியதெல்லாம் சுருதி
யுக்தி அனுபவத்துக்கு ஒத்ததாகவே யிருக்கிறது. ஆயினும் தற்கா
லத்தில் அநேகர்கள் கர்ப்ப ஸ்திரீகளிடம் சம்போக விஷயம் வைத்
துக் கொள்ளுகிறதாகத் தெரிகிறதே ! அது விஷயங் கூடுமோ கூடா

தா? அதற்கு ஏதாவது விதிவிலக்கிருந்தால் நான் அறியும்படி தய
வுசெய்யப் பிரார்த்திக்கிறேன்.

கர்ப்பமாதர்கள் கவனிப்பு

தின:—சம்பங்கி பூசி சல்லாபம் பேசும் கும்பத் தனத்தாய்கூ
றுவேன் கேளாய்! நீ தற்காலத்தவர் அனுஷ்டானத்தை நன்குயறிந்
தவளானதால் அங்ஙனங்கேட்டனை. அப்படிகேட்டது அவசியத்
திலும் அத்யாவசிய மானதாகவே தோன்றுகிறபடியால் சொல்லிவ
ருகிறேன் கேள்! மாதர்கள் கர்ப்பவதிகளான 6-மாதம் வரையிலும்
புணர்ச்சிகூடுமென்றும், அதன்மேற் கூடாதென்றும் அப்படி ஆறு
மாதம் வரையிலும் போகம் செய்வதால் கர்ப்பத்துக்கு யாதொரு
கெடுதியும் வராதபடி தேவேந்திரன் வரங்கொடுத்திருப்ப தாகவும்
ஏற்பட்டிருப்பினும் அது அவ்வளவு சிலாக்கிய மாகத்தோன்றவில்
லை. எங்ஙனமெனில், எப்பொழுது எந்தக்கருப்பையானது கருவை
ப்பெற்றுக் கொண்டதோ அன்றுதொட்டு அந்தக் கருப்பையான
து யாதொரு அலுங்கல் நலுங்கலன்றியிலும் உஷ்ணமாகாதபடி கு
ளிர்ச்சியாகவே யிருத்தல் வேண்டும். அவ்வாறின்றி புருஷன் அடிக்
கடி கர்ப்பஸ்திரீயிடம் போகிப்பதால் கர்ப்பாசய உள்ளுறுப்புகளு
க்குச் சூடுதாக்கி அதனுள்ளிருக்கும் பிண்டத்துக்கும் சூடேறி குழ
ந்தை பிரவசமாய் வெளிப்பட்டபிறகு பலவித ரோகவினைவால் பீடித்
து மிகமெலிந்து துரும்புபோ லாகிவிடும். தற்காலத்திலும் சாக்ஷியாக
இளைத்தபிள்ளைகளே! அநேகர்கள் இது கர்ப்பச்சூடதிகரிப்பதால் இ
ப்படி இளைத்திருக்கிற தென்பதை பல தடவைகளிலும் சொல்லக்
கேட்டிருக்கலாம் ஆனால் மனிதர்களில் மாத்திரம் அநேகர்கள் இவ்
விஷயத்தில் ஜாக்கிரதையா யிருப்பதில்லை, மாடு, நாய், முதலிய இழி
ந்த பிராணிகளெல்லாம் தத்தம் மினமானது கர்ப்பந்தரித்த விஷயத்
தைபற்றி மூகர்ந்து தெரிந்து கொண்டு ஒருக்காலும் சேர்வதேயில்
லை. அவ்வளவு கூட மனிதர்களில் சிலர் யோசிக்கிற தில்லை; அதைப்
பற்றி நாமும் அதிகமாகச் சொல்ல மனமில்லை. ஆகவே கர்ப்பிணிக
ளிடத்து ஒருபோதும் இணங்கவே கூடாதெனவறிக.

கம:—ஆயகலை யுணர்ந்த நாயகமணியே! தாம் கூறிய சமாதா
னம் மகாயுக்தமாகவே தோன்றுகிறது நிற்க, ஸ்திரீ புருஷாள் இணங்
கிய பின்னர் ஸ்நான சுத்தி அவசியமா வென்பதைப் பற்றிச் சந்தேக
மாயிருத்தலால் சிறிது விவரித்துரைக்கவேண்டும்.

சங்கமாசௌச ஸ்நானம் அவசியமே.

வினா:—தற்பையே பூஷணமாகக்கொண்ட கமலாக்ஷி! நீகேட்ட தற்கு உத்தரம் வருமாறுகாண்க; ஸ்மிருதிக்காரர்களி லொருவராகிய யாக்யவல்கியர் தமது ஸ்மிருதியில், ருதுநாள் என்று சொல்லப்படு கிற 16-தினங்களுக்குள் சம்போகம் செய்தால் அவசியம் ஸ்நானம் செய்தே தீரவேண்டும், ஏனெனில், பிண்டோற்பத்தி தினத்திலும் சிசுப்பிறந்த தினத்திலும் அந்த சிசுவுக்குப் பிதாவானவன் ஆ சௌசக்காரனானதால் கட்டாயம் ஸ்நானம் செய்தே தீரவேண்டும், ஆனால் பிண்டோற்பத்தி காலத்தில் ஸ்நானம் செய்யவேண்டுமென்று சொன்னதைக்கொண்டு 16-நாளைக்குள் இன்ன தினத்தில் கர்ப்பந் தரித்தது என்பதை அறிந்து கொள்வது அசாத்திய மானதாலேயே அங்ஙனங் கூறினரென அறிக. மிற்க; ருதுநாளாகிய 16-நாள் தவிர அதன்மேற் பட்ட தினங்களில் சங்கமம் செய்தால் கைகால் சுத்தி போருமானதென்றும், புணரும்போது மாத்திரமன்றி மற்ற சமயம் புருஷன் தனிமையாகவே சயனித்திருக்க வேண்டுமென்றும், அடிக் கடி போகிப்பதால் சம்பத்து குறையு மென்றும் கௌதமர் தமது ஸ்மிருதியில் கூறியிருக்கின்றார். இந்தவழக்கம் ஆங்கிலேயர்கள் தா ன் முக்கியமாக அப்பியசிக்கின்றார்கள். நம்மவருள் பெரும்பாலார் இவ்வாறு செய்வதில்லை, அப்படி ஸ்திரீ புருஷாளிருவருமே ஒரே ப டுக்கையிலிருந்து வருவதால் ஸ்திரீயின் சுவாசமானது புருஷன்மே ல்பாயும் அதனால் புருஷனுக்கு ஆயுள் க்ஷீணித்து விடுமென்பதை யறியவேண்டும். ருதுநாளைக்குப் பிந்திய 14-தினங்களிலும் ஸ்திரீயா னவள் சங்கமத்துக்குத் தானாக இஷ்டப்பட்டாலொழிய நாயகன் அவளிடம் பலவந்தமாய்ச் சேரக்கூடாவாம். ஆசௌசம்—தீட்டு.

கம:—அறிவிற்சிறந்த ஆடவா! தாம் கூறியதைக் கேட்டு சந் தோஷித்தேன்; மிற்க, தற்காலத்தில் ஓர் பிள்ளையின் தாய் தகப்பன் மார் ஓர் நிறமும், பிள்ளை அதற்கு நேர்மாறாக வேறுவித ரூபமும் நிறமுமா யிருக்கின்றதே; அது இன்னகாரணத்தா லென்பதைப் பற் றிச் சிறிது இயம்பல்வேண்டும்.

புத்திர ரூபபேத விளக்கம்.

வினை:—சமுகையொத்த கண்டத்தாய்! கழறுவ கேளாய்; சாதா ரணமாக புத்திரன் அபேக்ஷை கொண்டு சம்போகத்துக்கு ஆய

த்தமாகுங்கால் முன்னே கூறியுள்ள "சத் புத்திரோற்பத்தி விளக்கம்" என்ற தலைப்பின் கீழ்க்கண்ட விஷயங்களை யனுசரிப்பதோடு கூட நாயகனுடனிணங்கிய ஸ்திரீயானவள் அதிகாலையில் படுக்கையைவிட்டெழுந்திருக்கும்போது தன் புருஷன் முகத்தில் விழித்தே பிறகு மற்றவர்களைப் பார்க்க வேண்டுவது உசிதம். அவ்வாறு தன் நாயகன் முகத்தில் விழித்தால் தான் தன்னைப்போலாவது அல்லது தன் நாயகனைப்போலாவது குழந்தை பிறக்கும். அவ்வாறின்றி வேறு இதரமானவர்களின் முகத்தில் விழித்தால் அவர்களைப் போன்றே சிசு அவதரிக்குமெனக் கண்டிப்பா யறியவேண்டும். இந்த மர்மம் சிறுபான்மையோர்க்கே யன்றி பெரும்பாலார்க்கு விளங்கலாம். இதை யறியாமலே குழந்தையின் வேறு பாட்டால் மற்றையோர்கள் அந்த குழந்தையின் தாய்க்கு வியபிசாரிப் பட்டமுங் கட்டிவிடுவார்கள். இது சுத்த மடத்தனமாகும். இதுவல்லாமலும் நாயகனுக்கே தன் மனைவியின்மேல் சந்தேகத்துக் கிடமுண்டாகும். இதனால் இருவருள்ளும் ஒற்றுமையற்று கடுமையான மாச்சல்யத்துக்கும் இடமுண்டாகுமெனவறிக. இன்னும் அந்தக் குழந்தையானது தன் வீட்டிலுள்ள சகோதரபந்து வகையராக்களில் யாரைப் போல் பிறந்திருக்கிறதோ அவர்களிடமும் பிள்ளையின் பிதாவுக்கு மிக்கதோர் வர்மத்தை யுண்டுபண்ணி விடுமெனவறிக. ஆகையால் நாயகனிடத்திணங்கிய ஸ்திரீகள் தன் புருஷன் முகத்தைப் பார்த்தல் அவசியம்; தவிர நாயகன் வெளியில் போயிருப்பானாயின் கண்ணாடியைக் கொண்டு தன் முகத்தையாவது கட்டாயம் பார்த்தே தீரவேண்டும்.

சங்கம மங்கையர் சாதன விளக்கம்.

மாதர்கள் தங்கள் நாயகருடன் சம்போகித்தவுடன் எவ்வித காரணத்தைக் கொண்டும் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாவாம். ஏனெனில், இருவருடைய நாத விந்துக்களும் கருக்குழியிற் சென்று கூடியுங் கூடாமலுமா யிருக்குஞ் சமயத்தில் எழுந்து செல்வதால், அவை கீழொழுகி கெட்டுவிடவேதுவாகும். ஆனதுபற்றியே புணர்ச்சிக்குப் பின் அரை நாழிகை வரையில் படுக்கையைவிட்டெழுந்திருக்கக் கூடாதென முக்கியமா யுணரவேண்டும். அல்லாமலும் சங்கமத்துக்குப் பின் கடுமையான வேலையும் அதிகமான பசியும் உண்டுபண்ணிக் கொள்ளக்கூடாது. தவிர அடுத்தடுத்துப் போகிப்பதுங் கூடாவாம். ஏனெனில் புணர்ச்சி காலங்களில் கர்ப்பாசயத்

தின் முற்பக்கமே சலனப்படுவது இயற்கை யாதலாலும், அடிக்கடி போகிப்பதால முன்னே கருக்குழியில் தங்கிய கருவிற்கு சலனமுண்டாகி வெளிப்பட்டு விடுமெனவு மறிக.

மாதர்கள் தங்கள் நாயகனுடன் கலந்த மறுநாள் பேதி மருந்துட் கொள்ளுதலுங் கூடாவாம். நாயகனுந் தானும் சயனவிடத்திலுட்கார்ந்திருக்கும்போது தன்மேல் காதலுண்டாகும்படி நாயகன் முகத்தைக் கடைக்கணித்துப் பார்த்தாலும், இருவரும் நேர்நோக்க பார்க்கும்போது நாயகி சிறிது புன்னகை செய்தலும், தனக்கு புருஷன்மேலுள்ள காதலைக் குறிப்பால் அபிநயித்துக் காட்டலும், அருகிலுள்ள குழந்தையை யெடுத்தணைத்து முத்தங்கொடுத்தலும், நாயகன் தன்னைவிட்டு வெளியில் செல்லக்கருதில், செல்லாதிருத்தற் பொருட்டு பொய்த்தும்மல் தும்முதலும், நாயகனைப் பற்றிப் புகழ்ந்து பேசுதலும், அவன் வாயினின்றும் வரும் வார்த்தைகளை மிக விருப்பத்தோடு நெருங்கிக் கேட்டலும், அவனிருக்கு மிடத்துக்கு வேறொரு காரியமாகச் செல்பவள்போல அன்பினாலே அடிக்கடி செல்லுதலும், நாயகனைக் கண்ட மாத்திரத்தில் நாணமுடையவள் போல நாணி நிற்றலும், சம்போக மங்கைக்குரிய முக்கியமான காரியமெனவறிக. ஏனெனில், மேற்கண்டவாறு ஸ்திரிகள் நாயகனுக்குப் பலவிதத்தாலும் தன்மேலுள்ள ஆசையை விருத்திசெய்தால்தான் வேசி தாசி முதலான அன்னிய மாதர்களிடம் விருப்ப முண்டாகாம லிருக்குமெனவும் அவ்விருப்பத்துக்கு மேற்சொன்னவைக ளெல்லாம் ஓர் வேலி யெனவும் விபரமா யறியவேண்டும்.

தற்காலத்தில் சில குடும்ப மாதர்கள், தன்னை நாயகன் நெருங்கிய விடத்து தான் துக்கமுடையவள்போல நடித்தலும், நாயகன் தன்னைவிட்டு நீங்கியவிடத்து சந்தோஷித்திருத்தலும், நாயகன் வலுவில் வந்து தன்னை நெருங்கிடில் பிகுத்த கோபத்துடனே அவனைத் தூரத்தள்ளுதலும், ஆடையாபரணங்களை வேண்டுமளவும் விசனந் தீரக் கொடுக்கினும் மனமகிழ்ச்சியின்றி பொறாமையினால் இகழ்ந்து பேசுதலும், தழுவிய கணவன் கையைத்தள்ளி புகறலும் அவனைப் பார்க்கும்போது சத்துருவைப் பார்ப்பதுபோல வெறுப்போடு பார்த்தலும், அன்னிய புருஷர்களின் சரச விளையாட்டில் விருப்பங் காட்டலும், நாயகன் தன்னுடன் இணங்க விரும்பி வரும்போது தனக்கு சரீரத்தில் ஒருவித உபத்திரவம் இருப்பதுபோல பொய் ஜாலம் செய்வதும், நாயகன் படுக்கைக்கு வருமுன் தான் முன்னே சென்று குப்புறப்படுத்துப் பொய் தூக்கந் தூங்குவதும், ஆற்றாமை

யாற் பெருமூச்சு விடுதலும்; நாயகனால் செய்யப்படும் புறத்தொழிற்கும் ஒவ்வாது தன் சரீரத்தை முழுவதும் வஸ்திரத்தாலே மூடிக்கொள்ளுதலும் நாயகன் கொடுக்கும் வெற்றிலைப் பாக்கு முதலிய தின்பண்டங்களை வேண்டாமென எடுத்தெறிதலும் அவன் இன்சொற் சொல்லில் அதற்கு மாறாக கடூரவார்த்தை பேசுதலும் அவன் மேல் [illegible]தும் பொய்க்குற்றஞ் சாட்டிப் பொய்யாகச் சிணுங்குதலும் ஆகிய இவைகளெல்லாம் மூதேவித் தனமுடைய முரட்டு ஸ்திரீகளின் இலக்ஷிய கா[illegible]ல் இவைகளை மற்ற நல்ல குடும்ப ஸ்திரீகள் எள்ளளவும் கருத்திற் கொள்ளாதிருப்பார்களாக.

கம:—ஏ சர்வானுபவ பண்டிதா! தாம் இதுவரையில் சாற்றியதெல்லாம் சற்றும் விடாது சர்வ சிலாக்கியமா[illegible] தாகவே யெண்ணி என்னிரு காதுகளின் வழியாக எனது மனப்பெட்டியி லிட்டேன் இது நிற்க; மேற்சொன்ன துர் அநுஷ்டானங்களைத் தள்ளி நல்லிணக்கமாகவே யிருந்தால் அதனாலுண்டாவது கர்ப்பமல்லவா? அவ்வித கர்ப்பத்தை யடைந்த மங்கையர்களுக்கு ஏதும் அடையாளங்கள் உளதேல் அவைகளைப்பற்றித் தயைசெய்யப் பிரார்த்திக்கிறேன்.

கர்ப்பக்குறி காண்டல்

தின:—ஏ சம்போக சாஸ்திர சல்லாபினி! சாற்றுவேன் கேளாய், நம் தேசத்திலே இங்கிதம் பயனும் சங்கம மாதர்கள் தங்கள் மணவாளரோ டிணையாடி மாதுரியமான சாதுரியம்பேசி மருவியக் கமம்பால் மாதா மாதம் வந்துகொண்டிருந்த மாதவிடாய் நின்று விடல், அதிகாலை வாந்தி, மயக்கமுண்டாதல், கண்களிருண்டு வருதல், கண்களில் மஞ்சள் அல்லது ஊதாவர்ணந் தோன்றல், தேகமானது புஷ்டியாயும் மினுமினுப்பாயும் காணப்படல் முகத்தில் வசிகரந் தோன்றல், ஸ்தனங்கள் பெருத்தல், கையில் நாடியானது தீவிரமாயோடுதல், தின்பண்டங்களி லபேக்ஷைகூத வாயில் சதா நீர் சுரந்துகொண்டிருத்தல், சிறுநீர் முன்னைய நிறமாறி வேறு நிறமாதல் ஸ்தனங்களில் பால் பூரித்திருத்தல் முலைக்காம்பைச் சுற்றி யிருக்கிற விருத்தவடிவு முன்னிலுங் கறுத்தல் கர்ப்பத்துள்ளே சிசுவின் அசைவு தாய்க்குத் தோன்றல், ஆகிய இவ்வடையாளங்களால் கர்ப்பந் தரித்த விஷயத்தைப்பற்றி நன்றாயறிந்துகொள்ளலாம்.

கம:—எனது நற்றவப்பயனாய்க் கிடைத்த எ. நாயக..ருகைகளே! தாம்சொல்லிய குறிகள் யாவும் நான் பின்னே யறிவேன் .. சிறக, ஆண்குழந்தை பெண்குழந்தை என்னுமிரண்டிலில் அவரவர்கள் அபேக்ஷயின் பிரகாரம் ஆண்குழந்தையை விரும்பியவர் ஆணையும் பெண்குழந்தையை விரும்பியவர் பெண்ணையுங் கர்ப்பத்திலடைவதற்கு ஏதாவது கிரியாம்சங்களுளவாயின் எனக்குத்தெரியும்படி விவரிக்கவேண்டுகிறேன்.

ஆண்குழந்தையை கர்ப்பத்திலடையுந் தந்திரம்.

தின:—குமிழமலர்நாசிக் குணபூஷணியே! கூறுவேன்கேள் சாதாரணமாக மாதர்களுக்கு மாதவிடாய்வந்து ஸ்நானஞ்செய்து சுத்தியான நாலாநாள்முதல் 12-நாளே கருத்தரிக்குங் காலமாகும் அந்நாட்களில் இரட்டித்த நாட்களில் கூடிக் கருத்தரிக்குமாயின் அது ஆணாகவமையும். இன்னும் நாயகனுக்கு சூரியகலை அல்லது பிங்கலை யென்றவலது நாசித்துவாரத்தில் சுவாசம் போய்க்கொண்டிருக்கும் போது விந்துபாய்ந்து கருவுற்பத்தி யாகுமேல் அது ஆணையாம் இன்னும் ஸ்திரீயின் சுரத நீரைவிட புருஷனது விந்து குறைவாயிருக்குமேல் அதனைற்றரித்து பிறப்பது ஆண்குழந்தையாம்; இன்னும்புருஷன் தனது வலதுபீஜத்தைத் துணியினாலாவது அல்லதுஉர்வில்லினாலாவது தூக்கிக் கட்டிக்கொண்டு சங்கமம் செய்யின் அதில்தரித்துப் பிறப்பது ஆணாகுமென்றும் அறிந்துகொள்க.

கம:—நல்லோரிணக்க மல்லதை விரும்பா நாயகமணியே! இப்போது கூறிய இன்னுரை யாகவும் எப்போது மெத்த விதயத்திருக்கும்; தற்போது பெண்ணைத் தான்பெறுந் தந்திர விற்பனவழியை விளக்குதல் வேண்டும்.

பெண்குழந்தையைக் கர்ப்பத்தில் பெற்றிடுந்தந்திரம்.

தின:—ருதுகாலமென்கிற 12-தினங்களுக்குள் ஒற்றைப்பட்ட தினத்திலே மாதரைச் சேர்ந்து கருத்தரிக்கில் அது பெண்ணுருவமையும், இன்னும் இடகலை அல்லது சந்திரகலை யென்கிற இடது நாசித்துவாரத்தின் சுவாசம் செல்லும்போது கூடிக் கருத்தரிப்பது பெண்ணையாகும். இன்னும் நாயகியின் சுரதநீர் குறைந்து நாயகனது விந்து அதிகமாக விளைந்திடில் அதனாலுற்பவமாகும் குழந்தை பெண்ணையறிக. இன்னும்புருஷன் தனது இடது விதையை துணியினு

லேனும் ...ல்லினுமேலேனும் மெல்லென மேலே தூக்கிக் கட்டிச்சொன்டுசேர்வதானும் பெண்ணே தரிக்குமென நிச்சயமாயறிந்துகொள்க.

கட:—இல்லற மாதர்கட்கேற்ற நல்வழி யெல்லாம் சொல்லிவந்தயென் தோழமைக் கணவா! தாம்மேலே கூறியவையெல்லாமெத்தவுமுணர்ந்தேன். ஆனால் சம்போக மங்கையர்கட்கு கரு உற்பவமாகும் விதமெப்படியென்று எனக்குத் தெளிவாயியம்புதல்வேண்டும்.

கர்ப்பத்தில் கருவமையும் விளக்கம்.

தின:—இப்போது நமது நாட்டு மங்கையர்களுக்கு மாதாமாதம் வெளிப்படுகிற இரத்தஸ்கலிதத்துக்கு மாதவிடாயென்று பெயரல்லவா? இதுவானது அவர்களின் தேகத்தினின்றும் கழிவாகிற மேன் மிச்சங்களெல்லாம் ஒன்றுப்சேர்ந்து தானே வெளிப்பட்ட பின்பு அவர்களுக்குத்தேகம் சௌக்கியத்தை யடைகின்றது. இது எப்போது முதல்முதல் ஆரம்பமாகிறதோ அதுமுதற்கொண்டு வயோதிக பருவத்தில்நின்று விடுகிற பரியந்தம் புத்திரோற்பத்திகாலமெனவறிக. ஆனால்மாதவிடாய் தோன்றுவதற்குமுன்னும் அது சுத்தமாக நின்றுவிட்டபின்னும் புத்திரோற்பவமாகா தெனவறிக சம்போக மங்கையர்களுக்கு கருக்குழியில் கரு எவ்வாறு பொருந்துமெனில், நாயகநாயகிகளிருவரும் சேர்வதால் அவர்களிடமிருந்துவெளியாகிற விந்துநாதமிரண்டுமொத்து கருக்குழியா லிழுக்கப்பட்டு பக்குவப்படுத்தி கருவைவளர்க்கும் சுபாவம் கருப்பொறைக்குரிய முக்கிய வியல்பாமெனவறிக.

மாதவிடாய் ஸ்நான மங்கையர் மர்மம்.

மாதாந்தரம் வீட்டுக்கு வெளியாகிற மாதர்கள் ௩-நாளும் சென்று நாலாவது தினத்திலே ஸ்நானஞ் செய்தவுடன் சூரியனைத் தரிசித்து அதன்பிறகே புருஷர்கள் முகத்தைப் பார்க்கவேண்டும்அவ்வாறு பார்ப்பதற்கு நேர்படாவிடின் அவர்கள் உருவத்தையாவது மனதினால் தியானிக்கவேண்டிய அவசியம். இந்தவழக்கம் பெரும்பாலும் மகம்மதியர் முதல் அனைவர்க்கும் முக்கியமானதோர் விஷயம். இதைத்தவிர்த்து வேறெவரையும் பார்த்தல்கூடாவாம். இதன்றி கருப்பவதிகளான சமயத்தில் சூரிய சந்திர கிரகணங்களையும் அவசியம் பார்க்கக்கூடாவாம். ஆனலிது யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததென்றறிந்து கொள்க.

சாதாரணமாக நாயகனுடன் ரமித்த ஸ்திரீகளுக்கு கர்ப்பந்தரித்து மாதவிடாய் நின்றவுடனே மூதனுளிலாவது அல்லது பதிநாளிலாவது புணர்ச்சியில்மிக்க விருப்பமாயிருக்கும். அப்படியவர்கள் அதிகப்பிரியத்தைத் திருப்திசெய்யவேண்டி புருஷர்கள் அடிக்கடி இணங்கவொண்ணுது. ஏனெனில், இருவரும் அதிகமாகக்கூடிக் கலவிபுரிதலால் கருவழிந்து அக்கருவை வளர்க்கும் சக்தியுமற்றுப்போய்விடுமெனவறிக. இதற்கு சாக்ஷியாக சதா சம்போகிகளாகிய தாசிகளுக்குப் பிள்ளையுண்டாவ தரிதாயிருக்கிறதைப்பார்க்கலாம். ஆகவே சந்தான விருப்பமுடைய நாயகநாயகிகளிருவரும் அடிக்கடி சேர்க்கூடாதெனவறிக. மிகச்சிலரினுஞ்சிலர் ஸ்திரீ போகமே கூடாதென (உடலையும் நீண்ட ஆயுளையுங்கருதி) வெறுத்து நிறுத்தி விடுகிறார்கள். இதனுல் தேகத்துக்கு அநேககெடுதிகள் நேரிடுமெனவறிக. முக்கியமாய் கண்டத்துக்கு மேலேயுள்ள சிரோரோகமே அபாயகரமாய் வருமெனவறிக.

நாயகனுடன் சம்போகத்துக்குரிய மங்கையானவள் சயனத்தில் ஒருக்களித்துப் படுத்திருக்கும்போது புருஷன் இணங்கக்கூடாவாம். ஏனெனில், மனைவியின் ஜனனேந்திரியமானது வாயுவினுல்பலமாய் வாதிக்கப்பட்டு மெத்த இம்சைபட நேருமெனவறிக. வலப்பக்கமாய் ஒருக்களித்துப் படுத்திருக்கும் மனைவியுடனே நாயகன் கூடினுல் சிலேத்துமம் அதிகப்பட்டு சுக்கிலம் கருப்பொறையில் போய்ச் சேராதபடி அதனுடைய பலத்தைக் குறைத்துத் தடுத்துவிடும். இடதுபக்கமாய் ஒருக்களித்துப் படுத்திருக்கும் மனைவியுடனே நாயகன் சம்போகிக்கில், பித்தம்மேலிட்டு சுக்கில சுரோணித மிரண்டையுந் தடுத்துவிடுகிறது. இதனுல் ஸ்திரீயானவள் சமனுகப்படுத்திருக்கும்போதுதான் இணங்குவது கிரமமெனவறிந்துகொள்க. இவ்வித இயல்புப்புணர்ச்சியன்றி விகாரப்புணர்ச்சியாகிய பலவிதமாக 64-விதப் புணர்ச்சியும் சித்திரக்காரர்களின் புத்தி சாதுர்யமாய் முடியுமேயொழிய அவ்வாறெல்லாம் மனம் போனபடி கஷ்டத்துக்குள்ளாகிப் புணர்வதில் ஏதோ அதிக சுகமிருப்பதாகவெண்ணி மதிமயங்கி அதையே சதாஞாபகத்திலும் செய்கையிலும் வைத்துக்கொள்பவர்களின் புத்திசாலித்தனம் இம்மட்டென்பது என்றுற் சொல்லத்தரமன்று.

கம:—இருமை யின்பத்தின் பெருமையை விளக்கும் அருமைநாயக! தாங்கள் இதுவரையிலுங் கூறிய யாவும் சிரமேற் கொண்டேன், ஆனுல் இன்னும் எனக்கு அநேக சந்தேகங்கள் கேழ்க்கவே

ண்டி யிருக்கின்றன. அவைகளையெல்லாம் கேட்பின் "என்ன இவள்
அதிகப்பிரசங்கியாக நமக்கு மெத்த தொந்தரவைக் கொடுக்கிறா"
ளென்று ஏதும் மனதில் நினைக்கவருகிறதோ என்னமோவென்று ஏ
னதுமனம் சிறிது யோசிக்கின்றது; ஆகையால் தாம் தாராளமாகச்
சொல்லுவதாயிருந்தால் நான் ஏராளமாகக் கேட்கவுங்கூடும். நான் மா
த்திரமன்று; என்னைப்போன்ற எத்தனையோ ஏழைமதிச் சகோதர
சகோதரிகள் இது விஷயத்தில் ஒன்றுந்தெரியாமல் கன்னுபின்னுவி
ஷயமாக நடந்து வருகிறார்களாதலால் அவர்களுக்கும் பிரயோஜன
மாகவிருக்குமென்றே கேட்பதுந்தவிர இன்னுங் கேட்கவுமிருக்கின்
றேன். தங்கள் தயவு எப்படியோ?

தின:—ஏ எனது பிரியநாயகி! உலகத்திலே நாயகநாயகிகளா
க விருக்கிறவர்களில் சிலமாதர்கள் இரவிலே உண்டுகளி சயன அ
றையில் இருவருந் தனிமையாக விருக்கும் சமயத்தில் நாயகன் தன்
பத்தினியண்டை நெருங்கும்போது அவள் முகத்தைச் சுளித்துக்
கொண்டு கோணல் தனமெல்லாம் செய்து "போ போ உனக்கென்
ன இந்தவேலை? எனக்கு 150-ரூபாயில் நல்லகெம்பு கம்மல் வாங்கி
த்தந்தையோ, அடுத்தவீட்டுரெட்டி பெண்ஜாதி உடுத்திக்கொண்
டிருக்கிறாளே அந்தமாதிரியான நல்ல பனாரஸ் பட்டுப்புடவை யொ
ன்று எடுத்துக்கொடுவென்று எத்தனை வருஷமாக கேட்கிறேன்; நீ
ரும் ஏமாற்றிக்கொண்டே வருகிறீர்; இந்தமாத்திர மென்ன இப்
போ கன அவசரமாகக் கிட்டவருகிறீரோ, இதுவும் மெள்ள ஆகட்
டுமே" என்று இடித்துத்தள்ளும் தடித்தன ஸ்திரீகளைப்போலகேட்
காது "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும்
வாழினுமென்" என்ற வள்ளுவப் பெருமானார் வாக்கியக் கருத்தை
வெகு சிலாக்கியமாகக்கொண்டு சையோகத்தையும் நித்திரையையு
மறந்து சங்கமசாஸ்திரத்தைப்பற்றிச் சவிஸ்தாரமாகக் கேட்டதைக்
கொண்டு நான் மெத்தசந்தோஷமாகவே சொல்லத் தயாராக விருக்
கிறபடியால் நீ லஜ்ஜையுங் கூசாது கேட்கவேண்டியவைக ளெல்
லாம் கேட்பாய்.

கம:—எலார்த்தத்திலும் சிறந்த காலாந்தங் கற்ற கணவாள! தா
ம்மேலே கூறியவைகளைப்பற்றிச் சந்தோஷித்தேன்; நல்லதிருக்கட்
டும்; மாதர்கள் கற்பத்துள்ளே வளரும் சிசுவுக்கு எந்தெந்த மாதத்
திலே என்னென்ன உருப்புகளுண்டாகி கடைசியில் 10-ம் மாசத்
தில் வெளிவருகிற மர்ம விஷயங்களைப்பற்றி விவரமாக எனக்குக் கிரு
பைசெய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

நிசை:—கங்கையர் புகழும் நயாமிர்த வசனியே சனிதுயிலன் கேட்பாய்! நாயக நாயகிகளிருவரும் ரமிக்குங் காலத்திலே அவர்களிடமிருந்து வெளிப்படும் சுக்கிலச் சுரோணித மென்னும் இருவித சாரநீருள் மிகச்சிறிய பாகமொன்று சேர்ந்து குழைந்து ஒத்து நீர்க்குமிழியாம் 5-நாளையில், அதன்மேல் 9-வது தினத்துள்ளேமிளகு பெருமனும், 12-வது தினத்துள்ளே சுண்டைக்காய் பெருமனும், அதன்மேலும் 13-வது தினத்துள்ளே நெல்லிக்காய் பெருமனும், 15-வது தினத்துள்ளே எலுமிச்சம்பழத்தளவும், அதன்மேல் 17-வது தினத்துள்ளே விளாங்காயத்தின பெருமனும் அதன்மேல் 20-வது தினத்துள்ளே உருண்டை வடிவானதுமாறி அலைப்பட விரிந்து சிறிது சப்பட்டையாகியும், அதன்மேல் 27-வது தினத்துள்ளே ஆமையைப் போல சிறிது கருமணி கடுவுடல் சதுரமாகியும், அதன்மேல் 30-வது தினத்துள்ளே சதுரமாகிய ஆமை வடிவிலே தலைகால்கை இவைகள் சொற்பமாக அதாவது, கருணைக்கிழங்கிலிளைத்திருக்கிற சிறிய பாகங்களாகத் தோன்றி கழுத்து தோள் இவைகள் அற்பமாக ஆமை பஞ்சாங்கங்களைப்போல் அமையும்.

2-வது மாதபிண்ட நிலைமை.

இரண்டாவது மாசத்துக்குமேல் 3-வது மாசத்துக்குள்ளாக மேற்படி பிண்டமானது ஆமைவடிவுமாறி நீண்டு அதற்கு அரை, புறங்கால், சிரசாகப்பிரிந்து தோன்றிய அம்சத்துக்கு வாய், கண், மூக்கு, நெற்றி இவைகள் மிகச்சொற்பமாகப் பிரிந்து ஒருவித திட்டமாகக் காணப்பட்டு 6-அங்குல அளவினதாய் வளர்ந்திருக்கும்.

3-வது மாதபிண்ட நிலைமை.

3-வது மாசத்துக்கு மேல் 4-வது மாசத்துக்குள்ளாக மேற்கூறிய பிண்டத்துக்கு சிரசு, இருதுடைகள், இன்னும் கை கால் இவைகள் மிக நுட்பமாகப் பிரிந்து தோன்றுவதோடு அச்சிசுவுக்கு ஓர்வித உணர்ச்சியு மேற்பட்டு 8-அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

4-வது மாதபிண்ட நிலைமை.

4-வது மாசத்துக்குமேல் 5-வது மாசத்துக்குள்ளாக மேற்கூறிய நீட்சியான பிண்டத்திற் சிறிதாகப் பிரிந்து தோன்றிய அவ

யவங்களானவை ஒவ்வொன்றும் பூர்த்தியாக வளர்ந்து முகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் முழுப்பாகமாய்த் துலங்குவதோடு ஆண்குறி பெண்குறி இவைகள் பிரிந்துதோன்றி 10-அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

5-வது மாத சிசுவினிலைமை.

5-வது மாசத்துக்கு மேல் 6-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய சிசுவின் அந்த உறுப்புகளுக்குள்ளே மிருதுவாக எலும்புகளமைவதும் முகத்துள்ள மூக்கு, வாய், கண், காது, இவைகளுக்கும் சிரசுள்ளிருக்கிற மூளைக்கும் துவாரங்கள் அமைவதோடு மற்றுமுள்ள கீழவயவங்களாகிய மலஜத்துவாரமும் மனத்துலக்கமும் ஏற்பட்டு 12-அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

5-வது மாத சிசுவினிலைமை.

6-வது மாசத்துக்குமேல் 7-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய சிசுவுக்கு சிறுநரம்பு, தினை ரம்பு, கைகால்களில் காணப்படும் விரல்களி னுனியில் நகமும், தேக அவயவங்களில் போதுமான பலமும் பொருந்தி 14-அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

7-வது மாத சிசுவினிலைமை.

7-வது மாசத்துக்குமேல் 8-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறப்பட்ட அங்க வுறுப்புகளில் நீட்டமுடக்க வேதுவான மூட்டெலும்புகள் நன்றாயமைந்து தேகத்தின்மேலே ரோமத்துவாரங்கள்மிக நுட்பமாக ஏற்பட்டு ரோமங்களும் சிறிய குறுத்துகளாகத் தோன்றும். இதுவல்லாமலும், கருப்பைக்குள்சிசு அசைந்துபுரளலும், ஆறுதாரமும் ஐந்தெழுத்தும் 51-அக்ஷரமும், பஞ்சபூததேவதைகளும், ஸ்தூல சூக்ஷமமாகத்தோன்றி 16-அங்குல அளவினதாக வளர்ந்திருக்கும்.

8-வது மாத சிசுவினிலைமை.

8-வது மாசத்துக்குமேல் 9-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய வளர்த்தியோடுதேகத்துக்குள்ளே 72,000-நாடி நரம்புகளும், கர்ப்பவதியுண்ட அன்னசாரமானது சிசுவின் தொப்புள்வழியாகப் போவதற்குவேண்டி தாயின் அன்னசாரப்பைக்கும் சிசுவின்தொப்

புகுக்கும் ஒருவித ஜவ்வுக்குழாயானது கொடிபோல ஏற்பட்டு அதன்வழியாக தாயுண்ட அன்னசாரமானது குழந்தையின் உதரத்திற் சென்று சிசுவளர்ந்து உயிருடனசைந்துகொண்டிருக்கும். அல்லாமலும் மணிக்குடல்; இரைக்குடல், கல்லீரல், நுரையீரல், இரத்தசால், குண்டிக்காய், மலஜலப்புரைகளும் ஏற்பட்டு 18-அங்குல அளவினதாக வளர்ந்து காணப்படும்.

இந்த எட்டாமாதக் குழந்தையானது ஏதும் உற்பாதங்களால் கர்ப்பத்தினின்றும் வெளிவரின் அது அநேகமாய் ஜீவித்திருப்பது சந்தேகமாம். அல்லாமலும் சிசுவின் தாய்க்கு தேகத்தில் ஏதும் கெடுதிகள் ஏற்படுமாயின் அதினின்றும் அந்தத்தாயும் பிழைப்பதரியாய் முடியும். ஆகையால் உசாராயிருத்தல்வேண்டும்.

9-வது மாதசிசுவின் நிலைமை.

9-வது மாசத்துக்குமேல் 10-வது மாசத்துக்குள்ளாக மேலே கூறிய அம்சத்தோடு கூடியசிசுவின் தேக அஸ்திக்குள் மூளையும், சிரசில் மூளையும், தேகத்துக்குள் இரத்தம் சுத்தமாகியும், தேக அங்கங்களுள்ளே கிரமமாக ஏற்படவேண்டிய ஸ்தானங்களில் கொழுப்பும், தேகமேற்றோல் இரத்தவூரிப்பால் அழுத்தமாயும் சர்வாங்கங்களெல்லாம் முன்னிலும் வளர்ந்து பருத்து வலுவேறி கர்ப்பப்பைக்குள் கட்டுப்பட்டு வெதுவெதுப்பின் கஷ்டம் பொறுக்கலாற்றாது கல்லறிவோடு அடிக்கடி புறண்டும் நீண்டும் நிமிர்ந்தும் அசைந்துகொண்டிருக்கும். இவ்வித நிர்ப்பந்தத்துடனிருக்கிற சிசுவானது 19-அங்குல அளவினதாய் வளர்ந்திருக்கும்.

10-வது மாதசிசுவினிலைமை.

10-வது மாசத்திலே சிசுவானது பூர்வம் கர்ப்பாசயத்துள்ளே கருவாயமைந்த தினமுதலாக 300-நாளானவுடன் கர்ப்பப்பை கனிந்தும், கர்ப்பவாசல் தளர்ந்தும், (ஒருவன் மலைமேலிருந்து தலைகீழாய்க் குப்புறவிழுவதுபோல) சிசுவானது, தான் கர்ப்பப் பைக்குள் கட்டுப்பட்டிருந்த கஷ்டமும் வெப்பத் தகிப்பும் போதும் போதும் என் ஆண்டவரே இப்போது என்னை மன்னித்து இந்த அதிகஷ்டமான கடுந்தண்டனையினின்றும் விலக்கி வெளிப்படுத்தக் கிருபை செய்யவேண்டுமென்று சிரசின்மேலே கைகுவித்துத் தோத்திரஞ்செய்த பாவனையாகக்கூப்பிய இருகரங்களும் முன்னே தோன்றிப்

பிறக்குமெனவறிக. அப்போது சிசு 20-அங்குல அளவினதாகக் காணப்படும்.

கம:—எத்துணையினுஞ் சிறந்த மெய்த்துணையாகிய என்னுயிர்த்துணைவ, தாம் இத்துணையுமறிந்து கைத்துணையாகக் கிடைத்த கமலாக்ஷி யென்னும் சிறியேனை லக்ஷியஞ்செய்து செப்பிய இவ்வொப்பிலா கர்ப்பசிசு மர்மங்கள் யாவையும் பூர்ணமாகக் கற்பித்துக் கொண்டேன். இது சிற்க; கர்ப்பத்துள்ளே, வளர்கிற சிசுவை ஆணென்றும் பெண்ணென்றும் முன்னதாகவே தெரிந்துகொள்ள ஏதும் அனுபவங்களிருப்பின் அடியேனறியும்படி தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஆண்சிசுவுள்ள கெர்ப்ப அடையாளம்.

தின:—முல்லைமருப்பையு முத்தையுமொத்த பல்வரிசை வாய்ந்த என்பாங்கியே! கேளாய், சாதாரணமாக மனிதர்களுக்குள் தங்கள் நாயகி கர்ப்பவதிகளா யிருப்பார்களாகில் அந்த கர்ப்பத்துக்குள்ளேயிருக்கிற சிசு ஆணு அல்லது பெண்ணுவென்று தெரிந்துகொள்ளவேண்டியது அநேகருக்கு அவசியமாகத் தோற்றுமாதலின் அவர்களது நன்மையின்பொருட்டும் உனது வேண்டுகோளுக்காகவும் சொல்லுவேன் கேட்பாய்; கர்ப்பத்துள்ளே யிருக்கிற சிசுவானது ஆணாயிருக்குமாயின் அந்தக்கர்ப்பிணியின் வலதுஸ்தனம் பருத்திருத்தல், அந்த ஸ்தனத்திலே நிரம்பியிருக்கிற பாலானது கலங்கலாகவும் வெண்மையாகவு மிருத்தல், கர்ப்பிணியின் சிறுநீர் முன்னைய வர்ணமாறி பலவர்ணமாய் காணப்படல், சிசுகர்ப்பத்தின் வலதுபக்க மிருப்பதாகத் தோன்றுதல் கர்ப்பிணி எழுந்திருக்கையிலும் உட்காருகையிலும் அடிக்கடி வலது கையை யூன்றுதல், ஸ்தனத்திலுள்ள பாலில் ஓர் துளியை தண்ணீரில்விட மிதத்தல் ஆகிய இவ்வடையாளங்களால் கர்ப்பித்துள்ளது ஆணென்றறிந்துகொள்ளலாம்.

கம:—ஏ நாதா! தாம் கூறியன வறிந்தேன். பெண் சிசுவானது கர்ப்பத்துள்ளே யிருக்குமாயின் அதற்குள்ள அடையாளங்களையும் தெரிவிக்கவேண்டும்.

பெண்சிசுவுள்ள கர்ப்ப அடையாளம்.

தின:—ஏ எனது அதிசாசி! சொல்லக்கேள்; கர்ப்ப மாதர்களது இரு ஸ்தனங்களில் இடது ஸ்தனம் பெருத்துக் காணல்

தேகத்தில் அதிக சோம்பலுண்டாதல், கேவலமான தின்பண்டங்களில் பிரியமுண்டாதல், அடிக்கடி பொய்ப்பசி தோன்றுதல், முகாரவிந்த வர்ணமாறி வேறு வர்ணமாதல், கர்ப்பத்திலுள்ளே சிசுவானது இடது பாரிசமா யிருப்பது போலத் தோன்றல், உட்காரும்போதும் எழுந்திருக்கும் போதும் உடனுக்குடன் இடதுகையை யூன்றுதல் ஆகிய இவ்வடையாளங்களால் பெண்ணென் றறிந்து கொள்ளலாம்.

கம:—மெத்தவு முணர்ந்து புத்தியிற் சிறந்த மேதகக் கல்விமானே! தாம் மேலே கூறியவையெலா முணர்ந்தேன். மனிதர்களுக்குள்ளே நாயக நாயகிக ளிருவரும் தேகத்திலே யாதொரு கெடுதியும் வாட்டமுமின்றி மன்னிலும் மிக பளபளப்போடு அதிக புஷ்டியாய்க் காணப்படும் அநேகர்கட்கு புத்திரோற்பவமே யில்லாமல் மலடாகத் தங்கள் தங்கள் தாய் தகப்பன்மார்களுக்குத் தாங்கள் பின்னையாக விருக்கின்றார்களே! இதன் காரணமென்ன தெரிவிக்க வேண்டும்.

ஆண்மலட்டின் விவரம்.

தின:—பவளவிதழ் வாய்ந்த பொற் பாவையே! பகருவேன் கேள்; "ஆளைக்கண்டு மலைக்காதே அது ஊதுகணம்" என்று ஓர் பழமொழியுண்டு, நீயுங் கேட்டிருப்பாய், அதுபோல ஸ்திரீ புருஷா ளிருவரும் புஷ்டியாயும் அழகாயு மிருந்தால் மாத்திரம் போராது; சந்தான விர்த்தியில்லாத ஆடவன் எவனோ அவனது சுக்கிலத்தில் உஷ்ணமானது அளவிற் கதிகமாகத் தாக்கி அதனால் பலவீனமாகி ஸ்திரீயின் சுரோணிதத்தோடு கூடிக் கருவமையுந் தனது சக்தி இயல்புக்குக் குறைந்து போவதாலும், பலவித ரோகங்களால் விந்து கெட்டு துர்வாடையும், எரிவுண்டாயிருத்தலும், மஞ்சள் வர்ணமாக நிறம் மாறிவிடுவதாலும், நீர்த்துத் தண்ணீர்போல இளகிவிடுவதாலும், அதிகக் குளிர்ச்சியாயிருத்தல், அதிகத் தடிப்பாயிருத்தல், அளவிற்கதிகமா யிருத்தல் ஆகிய இக்காரணங்களால் கருவமையாது மலடாய்ப்போக நேருகிறதென்றறிக

கம:—நல்லது; புருஷர்களுக்கு இக்கதியால் மலடாய்ப்போவதிருக்கட்டும், ஸ்திரீகளுக்கு எந்தகாரணத்தால் மலடு நேரிடுகிறது? அதையும் அறிவிக்கவேண்டு மென்னதிப!

பெண்மலட்டின் விவரம்.

தின:—அமிர்த கபாடந் திறக்கும் திறவுகோல்போலும் கைவிரல்களையுடைய என் ஆசை நாயகி! பேசுவேன்கேள்:—சந்தானமில்லாத மலட்டுமாதர்களது கர்ப்பாசயத்தில் உஷ்ணமதிகப்பட்டு விடுவதால் அதில் வந்தியங்கும் நாதமும் அதிகமாயுஷ்ணித்து அதனுடன் சேரும் புருஷனது விந்துவில் குளிர்ச்சியுண்டாகி வற்றிப்பின்றனக்குள்ள கருத்தரிக்கும் இயல்பற்றதன்றி விடுகிறது, இதுவல்லாமலும் சூதக பந்தயோகத்திலுடைய கர்ப்பாசயத்தில் வாதசத்து அதிகரித்து அதில்வந்தடைருந்தும் விந்துவை யேற்காது தள்ளிவிடும் இதுவுமன்றியில் கர்ப்பாசயத்தில் பித்தசத்து அதிகரித்து திட்டத்துக்கு மிஞ்சிய உஷ்ணமுண்டாகி அதில் வந்தியங்கும் நாத விந்துவை யியக்காது சுழித்துவிடும்; இதற்கறிகுறியாக நாடிகள் படபடத்தல், திமிர்முறித்தல், கண்ணெரிவு அல்குல் வரட்சி, மலம், ஜலம், கண், நாக்கு, சருமம் இவை கருத்தல், நித்திரை பங்கம், வயிறாதல் அதிகபசி, கைகால் அல்குல் இவை கொதித்தல் ஆகிய இவ்வித குணங்களால் பெண்கள் மலடாவாரென்றறிக.

கம:—ஏ சர்வ சிலாக்கிய வாக்கிய ப்ரக்கியாதிப! தாம் சாற்றினவறிந்தேன், இந்த இருபாலாருள்ளும் மலடாவார் இன்னார் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய ஏதுக்களுண்டாயின் தயவுசெய்து அறிவிக்க கோருகிறேன்.

இன்னார் மலடெனவறியுந்திறம்.

தின:—ஏ வல்லிக்கொடியன மெல்லியவிடையாய்! சாதாரணமாய் மலடாயுள்ள ஆண் பெண் இருவர்களின் சிறுநீரை வெவ்வேறு பாத்திரத்தில பிடித்து அதை, பயிராகி வளர்கிற சுரைக்கொடியில் தனித்தனியாக 5-தினம் வார்த்துவர, எவர் நீர் விட்டகொடி காய்ந்ததோ அவர் மலடென வறிக.

இன்னும் இரண்டு பாத்திரங்களில் சொற்ப வெச்சைக் கொட்டையிட்டு அதில் இருவருடைய சிறுநீரையும் தனித்தனியா யூற்றிவர, சிலதினம் கழித்துப் பார்க்கும்போது யாருடைய நீர் விட்ட கொட்டைமுளைக்கவில்லையோ அவர்களை மலடென வறிந்து கொள்ளலாம்.

கம:—ஏ விவேக சிங்கார! தாம்மேலே விளம்பிய இருவித பரீக்ஷை மூலமாக பின்னே ஏதும் சமயம் நேர்ந்துழி ஆராய்வாம் இப்

போது நம்தேசத்து மாதர்களில் சிலர் கர்ப்பத்தினின்றும் அபூர்வமாய இரண்டுகுழந்தைகள் பிறக்கின்றனவே அதன்மர்மத்தைப் பற்றித் தெரிவிக்கக் கோருகிறேன்.

இரட்டைபிள்ளை விவரம்.

தின:—செவ்விளநீரைப் பழித்ததாகச் செழித்து விளங்கும் திவ்யஸ்தனங்களையுடைய திருச்சொற்பாவையே! நாயகநாயகிகளிருவரும்சேர்ந்து விந்துநாதங்கள் வெளிப்பட்டு கருக்குழியாய் இழுக்கப்படுகிற சாதநீர்த் திவலையானது, சாதாரணமாக அறுகம்புல் நுனியில் தங்கும்பனிநீர்த் துளி யெவ்வளவோ, அவ்வளவே கருப்பையா லிழுக்கப்படுமன்றி இருவரிடமிருந்து வெளிப்படும் சாதநீர் யாவும் கருப்பொறையிற் செல்லமாட்டாது. திருஷ்டாந்தமாக ஸ்ரீமான் சுத்தத்துறவியாம் பட்டினத்தார் பாடலின் ஓர்பால்.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு மன்பு பொருந்தி
புணர்வுகலந்தி டொழுகியவிந்து ஊறுசுரோணித மீதுகலந்து
பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து புகுந்துதிரண்டு

என்று கூறியவாற்றாலும்,

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு
வாகமாகியோர் பாலருபமாய்

என்று அருணகிரியார் திருவாய் மலர்ந்தருளியவாற்றானும் கண்டுகொள்க. அங்ஙனம் செல்லும் சொற்பமான சாதநீர்த் திவலையில் எத்தனை விந்துக்கிருமிக ளிருக்கின்றனவோ அத்தனை சிசு உற்பத்தியாகும், ஒன்றிருந்தால் ஓர்சிசுவும் இரண்டிருந்தால் இரண்டுசிசுவும் உண்டாமென வுணர்ந்துகொள்க.

கா:—எப்பொருளுக்கும் மேற்பொருளாய் கல்விப்பொருள் நிறைந்த கனகமணிப் பெட்டகமனைய கணவனே! தாம் கூறியதை பிசக் தெளிவுற அறிந்தேன் இது நிற்க; தீர்க்காலத்திலே, நீவுணர்த்தத்தின் பொருட்டுக், காமவிடயாத்தியின் பொருட்டும் அனேக புருஷர்களோடு சேர்ந்து இணங்குபவர்களாகிய சில வியபிசாரஸ்திரீகளுக்கு பிறக்கும் பிள்ளைகளுள் ஏதேனுமொன்று நல்ல ரூபமாயும், நுட்ப புத்தியுடையதாயும், தாஷ்டிகமாயும் துஷ்டத்தனமாயுமிருத்தலை நோக்கி இதுபல விந்துகோத்திர உற்பவக் குழந்தையென்கிறார்களே இதன்காரணமென்ன? அப்படி பலபேர்களின்

விந்துவெல்லா மொன்று சேர்ந்து அதில் ஓர்குழந்தை உற்பவித் தனு முண்டோ தெரிவிக்கவேண்டும்.

புத்திர குணரூபவிபரீத விளக்கம்.

தின:—ஆரியநாட்டுச் சீரியர்புகழும் நாரியே! கேட்பாய் மேலே நீ சந்தேகித்துக் கேட்டது. அறிவீனத்தனத்தால் சில சாமானியர் கள் சொல்வது வழக்கந்தான். அது அசத்தபிசகு; ஓரே புருஷனை யுடைய கற்புடைய மங்கை பெறுவது மேற்கண்ட குணாதிசயமான குழந்தை பிறந்திருக்கவில்லையா? நிற்க ஓர் ஸ்திரீயினிடத்து அநேக புருஷர்கள் சங்கமித்தலால் வெளிவரும் விந்து அவ்வப் போது கருக்குழியில் போய்க்கொண்டேயிருக்குமென்பது சிறிது மொவ்வாது. எப்போது எந்த ஆடவன் விந்து கருக்கூடடைந்த தோ அதுமுதல் கருப்பையின் வாய்மூடிக்கொண்டு தன்னிடம் வந்தகருவை வளர்ப்பிக்குமேயன்றி மேலும் மேலும் வந்துகொண் டேயிருக்குமவைகளை வாங்கிக்கொண்டேயிருக்கும் வழக்கம் கருக்குழிக்கு ஒருபோதுமில்லை யெனவறிக.

கம:—கற்றவர் போற்றும் நற்றமிழ் நாவலா! தாங்கள் கூறிய வைகியாயமே; ஆயினும் ஓர் சந்தேகம். அதாவது, பசியுண்டாகிய வொருவன் ஓர்தடவை யுண்டு வயிறு நிரம்பிய பின்னர் சொற்ப நேரங்கழித்து மறுபடியும் பசியுண்டாகி உண்ணவில்லையா? அது போல ஏன் பலதடவைகளிலும் கருக்குழியானது விந்துவைபெற் றுக்கொள்ளக்கூடாது.

தின:—இங்கித வசன சங்கைகள் புரியும் பங்கய முகத்தாய் பகருவேன்கேட்பாய். ஒருவன் தனக்குப்பசி வந்தபோது ஆகார த்தையுட்கொண்டால் அந்த ஆகாரமானது வெகு சீக்கிரமாக ஜீர ணஸ்தியாகி மலம், ஜலம், அசனசக்தி என்பனவாய்ப் பிரிந்து இரப்பையானது வெறுமையா யிருத்தலால் மறுபடியும் உதராக் கினி பாதையால் உணவேற்குந் தன்மையா யிருக்கிறது. கருப்பை யின் சுபாவமப்படியல்ல; கருப்பையானது தன்னுள்ளிட்ட கரு வைப் புசித்துவிடாது நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ப்பிக்கும்இயற் கையா யிருக்கும்போது மீளவும் கருதேற்றல் எப்படி? இது கொ ஞ்சமும் பொருந்தாவாம்.

கம:—கோதிலா குணர்ந்தநற் குலமணிக்கொழுந! தற்கால த்து ஆங்கிலேய புலவர்களால், கர்ப்பிணிகள் பிரசவிக்கும் தின

த்தை முன்னதாகவே யறிந்துகொள்ளுமாறு ஓர் யுக்திகணிதம் ஒன்றுசண்டுளதென்று கேள்வியுற்றபடியால் தமக்குத் தெ கணிதவழி ஏற்பட்டிருப்பின் எனக்குக் கிருபைசெய்யவேண்டும்.

பின்னேபிரசவித்தலை முன்னேயறிதல்.

தின:—செந்தமிழ் கல்லா சிந்தைபோலிருண்ட கந்தவார் கூந்தற்காதலி! நாயகனுடன் சமித்துவரும் ஸ்திரீயானவள் கடைசியாக விட்டுத்தூரமான நாளோடு 3-மாதம் முன்னிட்டுக் கணக்குசெய்து அதனோடு 7-நாள் கூட்டிக்கொள்ள, ஏற்படுகிற மாசத்தேதியே பின் பிரசவிக்குந் தினமாம். யெப்படியெனில் உதாரணமாக ஓர் ஸ்திரீயானவள் ஜூன் மீ 10உ விட்டுத்தூரமானதாக வைத்துக்கொண்டு 3-மாதம் முன்னிட்டுக் கணக்கிட மார்ச்சு மீ 10உயாகும். அதோடு 7-நாள்கூட்ட 17உயாகும். ஆகவே மார்ச்சு மீ 17உ பிரசவதினமென அறிந்துகொள்க. [illegible] நாளும் வித்தியாசப்படுவதுமுண்டு.

கம:—கல்லறிவுச்சுடர் கொளுத்தும் ஏ ஞானசூரிய! கூறியதுணர்ந்தேன். இனி கர்ப்பிணிகளின் ஆகார கிரமங்களைப்பற்றிச் சிறிது விவரமாக விளங்கச்செய்வீரென வேண்டுகிறேன்.

கர்ப்பிணி ஆகார கிரம விளக்கம்.

தின:—ஏ ரஞ்சித வசன வஞ்சியேகேளாய்; கர்ப்ப ஸ்திரீயானவள் உட்கொள்ளும் ஆகாரத்தில் நன்றாய்ப் பக்குவப்படுத்திய காய்கறிகளும் மற்றும் மாம்சதாரிகளாயின் மாம்சங்களும் யதேஷ்டமாகச் சேர்த்துக்கொள்ளல் நலம். ஊறுகாய், அதிக காரங்கூட்டிய தாளித்த பதார்த்தங்களை மிதமாய்ச் சேர்க்கவேண்டும். மாம்சத்துடனும், காய்கறிகளுடனும் உப்பு அதிகமாய்ச் சேர்தல் இரத்த சுத்தத்திற்கும் இந்த புஷ்டிக்கும் மிகநலம். இன்னும் பால் சேர்த்து சமைத்த அன்னம், சவ்வரிசிப்பாயசம், அல்வா, ரொட்டி பழவகைகள் இவைகளை மத்தியான காலத்தில் அச்சமின்றிச் சாப்பிடலாம். போதைவஸ்துக்களான சாராயம், கள், ஒயின், பிராந்தி, விஸ்கி, பீர் முதலான யாதொரு லாகிரி வஸ்துக்களையும் தன் பக்கத்தில் கூடக் கொண்டுவரக்கூடாது. இவை ஒவ்வொன்றும் சரீரத்துக்குமிகத் துன்பத்தைவிளைப்பதாகும், இன்னும் உடம்பு [illegible]த்தையுண்ட கர்ப்பிணிக்குப் பிறக்கும் பிள்ளையானது மூத்திர [illegible]டைப்பு, மேகவெட்

டை இந்தரோகங்களால் கஷ்டப்படுமெனவறிக, தவிர பன்றியிறைச்சியை கர்ப்பணி புசிக்கக்கூடாவாம் ஏனெனில் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளையானது தடிப்பான கட்டை மயிருடையதாயும் ஞானசூனிய முள்ளதாயும் தேகம்விகாரரூபமாயும் காணப்படுவதாலுமேயாம்; நிற்க, மாம்சபதார்த்தங்களை அடிக்கடி சேர்க்கவொண்ணாது ஏனெனில், அவர்களுக்குப்பிறக்கும் பிள்ளைகளுக்கு சதா சுரங்களில் பிணிவடியும்; அன்றி அதிக தித்திப்பான பதார்த்தங்களும் [illegible] யுண்ணவேண்டும். ஏனெனில் அதனால் மேகவியாதிகள் குழந்தைகளுக்குத் தோன்றப்படுமாதலால் கூடாதென்றது.

கம:—உத்தமஜாதிப் புத்திமானே! தாம் கூறியது மிக நன்மையாகவே ஏற்பட்டது. இதுநிற்க; கர்ப்பஸ்திரீகள் தங்கள் சரீரகாப்புவிஷயமாக நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்கான நடவடிக்கைகளைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லவேண்டிய தவசியமெனத் தோன்றுகிறபடியால் தயவுசெய்து[illegible].

கற்பிணிகளின் கிரம நடப்பு.

தின:—ஏ நற்குணம்வாய்ந்த பொற்கொடிமாதே! நவிலுவதறிவாய். கர்ப்பஸ்திரீகள் அநேகமாய் நான்குமாதங்களுக்குப்பின்னை இறுக்கமாக ரவிக்கை தரிக்கவொண்ணாது. ஏனெனில் சுவாசமானது தாராளமாகப் போய்க்கொண்டிருக்கத் தடைப்படுமாதலாலும், இரத்த சஞ்சாரம் செய்வதற் கிடையூறுயிருத்தல் காரணமாகவுமேயாம்.

இன்னும் கர்ப்பிணிகள் கனமான சாமான்களை மேலே தூக்குதலும், சிரமத்துடன் அவைகளைத் தள்ளுதலு மிக்க துன்பஞ்செய்யும். அதிக உழைப்பான வேலைகள் செய்யவுங்கூடாது. ஏனெனில் ஒருக்கால் அகாலப் பிரசவம் நேரிடினும்நேரும். குறைந்தபக்ஷம் 1-மணிநேரமாவது சுத்தகாற்றுவீசும் வெளிப்பக்கங்களில் உலாவவேண்டும்.

கர்ப்பிணிகள் உறங்க வேண்டுமானால் மத்தியான காலத்தில் உண்டபின்பு இரண்டு மணி நேரம் கட்டிலிலாவது படுக்கையிலாவது நித்திரைசெய்யத் [illegible]சௌக்கியத்தைத் தரும். இரவில் சீக்கிரம் சயனித்துக்கொண்டு சுமார் 8-அல்லது 9-மணிநேரம் நன்றாய்த் தூங்கவேண்டும்.

கர்ப்பிணிகள் படுக்கையிடத்தில் கிரோசின் எண்ணைத் தீபம் வைத்துக்கொள்வது கிரமப்பிசகு. ஏனெனில், இந்த தீப்புகையான து அறையிலுள்ள சுத்தவாயுவை அசுத்தப்படுத்தி கர்ப்பிணியின் பிராணவாயுவோடு கலந்து உள்ளே செல்லுதலால் கெடுதியுண்டு பண்ணும். குளிர்காலம் மாரிகாலங்களில் படுக்கை யறையில் புகைமே லெழும்பாத கணப்புச்சட்டி வைத்துக்கொள்வது மிகநலம்.

கர்ப்பிணிகள், அம்மை, சுரமுதலிய தொத்துவியாதிகள் கண்டிருக்கும் இடங்களுக்குப்போகவும், அப்படிப்பட்டவர்கள் வீட்டிலிருந்து தன்னிடத்துக்கு எவரும் வரப்போக விருக்கவும் அவசியங்கூடாவாம். ஏனெனில், இவ்வியாதிகள் வெகு எளிதில் கர்ப்பிணிகளுக்குத் தொற்றி அகால பிரசவத்தைக் கொண்டுவந்து விடுவதோடு மரணவேதனைக்கும் ஆளாக்கி விடுமெனவறிக.

கம:—எ சத்வகுண சித்வமணியோய்! மேலே கூறியகர்ப்பிணிகளின் நடவடிக்கைகளை யறிந்தேன். இனிப் பிரசவ சம்பந்தமான சர்வவிஷயங்களையும் தெளிவாக எனக்கு தெரிவிக்கக்கோருகிறேன்.

பிரசவித்தவட்கு உடன்செய் சிகிச்சை.

தின:—பெண்கள் நாயகமே! கேள், கர்ப்பிணியான ஸ்திரீயானவள் 10-வதுமாசம் பிரசவமானவுடனே கொஞ்சமும் படபடத் தெழுந்துட்காராமல் உடன் ஆகாரமாக சூடான பாலாவது அல்லது தேயிலைத் தண்ணீராவது குடிக்க கொடுக்கலாம்; தவிர தற்காலவினை ஏற்பாட்டுப்படிக்கு ஏதும் பிராந்தி முதலிய உஷ்ண வஸ்துக்களையும் மற்றும் மருந்துகளையும் கொடுக்கலாம்.

பிரசவித்தவுடன் சிசுவின் தொப்புட்கொடியை கீழே சொல்லியபிரகாரம் பக்குவமாய்க் கத்தரித்து வேறாக யெடுத்து குழந்தையை அப்புறப்படுத்தியபின்பு விரைவாக தாயின் அடிவயிற்றில் (அதாவது இடுப்பின்கீழும் * குய்யஸ்தானத்துக்குமேலும்) நல்லதுணியாலாவது அல்லது மிருதுவான கச்சையினாலாவது கட்டிவிடவேண்டும். இந்தவிஷயத்தில் கொஞ்சமுந் தாமதிக்கக்கூடாது. இப்படிக்கட்டி விடுவதால் சாரங்கொஞ்சம் அழுந்தவே ரத்தம் பெருகாமலிருக்கவோடு கர்ப்பாசயத்தைச் சுருக்கச்செய்யும். அன்றி வயிறு கோரரூபமாகாமலிருக்கும்.

---

* குய்யஸ்தானம் - மர்மஸ்தானம்.

சிசுவின் தொப்புட்கொடி சிகிச்சை.

கர்ப்பத்தினின்றும் சிசு வெளிவந்தவுடனே மாயையில் ஒட்டிக்கொண்டிருக்கிற அதன் தொப்புட்கொடிக்கு ஓர் சிறு நூல் யிற்றினாலாவது அல்லது டேப்புக் கச்சையினாலாவது குழந்தையின் நாபியினின்றும் இரண்டங்குலதூரத்தில் கொடியில் ஒருகட்டும், அதினின்றும் இரண்டங்குல தூரத்தில் ஒரு கட்டுமாக இரண்டு கட்டு கட்டவேண்டும். பின்னர் மழுங்கல் கத்தியினால் அவ்விரண்டு கட்டுகளுக்கு மிடையில் கத்தரித்துக் குழந்தையை தாயினின்றும் வேறுபடுத்திவிடவேண்டும்.

சிசுவின் தாய் சௌக்கியமாய் படுக்கையில் படுத்துக்கொண்டபிற்பாடு மருத்துவஸ்திரீயானவள் சிசுவுக்கு ஸ்நானம் செய்வித்துநன்றாய்த்துவட்டி பால்கொடுக்கத் தாயினிடம் கொடுக்கவேண்டும்.

பிரசவித்த ஸ்திரீக்கு உடனே தத்தம் வழக்கப் பிரகாரம் கொடுக்கவேண்டிய மருந்துகொடுத்து அது சரிவர இரைப்பையில் சென்று சீரணித்தபின்னர் இளைப்புக் களைப்புத்தீர சிறிது நீவைக்கஞ்சிகுடாகக்கொடுக்கலாம். தண்ணீர்பானம் ஒருபோதுங் கூடாது இப்படி மூன்றுதினம் சென்றபின்னர் வழக்கத்துக்கு விரோதமன்னியில் பத்தியமாகசிறிது காரசாரத்தோடு தனக்குவேண்டிய அளவு சாதம்கொடுக்கவும். அப்படிப் புசித்தால்தான்தேகம் மிகத்திடப்படும். பாலுங் குணப்படும் நிற்க; அடிவயிற்றில் போட்டிருக்கிறகட்டு கழுவிவிடாமல் அடிக்கடி கவனித்துச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும்.

பிறந்தகுழந்தை பால்குடித்து வாயெடுத்த பின்னர் அடிக்கடி இரண்டு உதட்டையும் துணியினால் நன்றாகத் துடைக்கவேண்டும் அவ்வாறு செய்யாவிடில், குழந்தை சப்பும் முலைக்காம்பு வாம்பைச் சுற்றியேற்கனவேயுள்ள கருமையானது உதட்டில் பிடித்துக்கொண்டு எப்போதும் கறுப்புதடாகவேயிருக்கும். ஆகையால் ஞாபகமாய்ச் செய்யவேண்டும். இந்த மர்மம் அநேகருக்குத் தெரியாதபடியால் தான்சிலருக்கு எப்போதும் உதடு கருமையாகவேயிருக்கிறது.

குழந்தைகளுக்கு ஓர்முறைவிட் டொன்று நீராட்டவேண்டும் ஜலமானதுமிதமான வென்னீரா யிருக்கவேண்டும். 1-மீ சிசுவுக்கு 5-நிமிஷத்துள்ளும் அதன்மேற்பட்ட குழந்தைகளுக்கு 10-நிமிஷத்துள்ளும் நீராட்டவேண்டும். அப்படி நீராட்டும் வென்னீரில் குட்டி

விளாயிலைக் கிழாழம் சிறிது கலந்து ஸ்நானம் செய்விக்க தேகத்துக்கு மிக சுகமாயிருக்கும்.

இராக்காலங்களில் குழந்தைதூங்காமல் அழுதுகொண்டே யிருக்கும் ஞல் அதற்காக மாலைநேரத்தில் மேற்கண்டபடி ஸ்நானஞ்செய்வித்தால் சுகமாய்த்தூங்கும்.

குழந்தை ஜனித்த ஒருவாரத்துக்குள்ளாக ஜனன ரிஜிஸ்தரில் ...ப்படி கிராம உத்தியோகஸ்தர்களிடம் தெரிவிக்கவேண்டியது குழந்தை பிறந்த 3-மாதத்துக்குமேல் 1-வருஷத்துக்குள்ளாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் அம்மை குத்திக்கொள்ளவேண்டியது. அப்படி அம்மை குத்தும் உத்தியோகஸ்தரைக் குத்தக்கூடாதென்று நிராகரிக்கக்கூடாது. அப்படி நிராகரித்தால் சட்டப்படி தண்டனை யடைய நேரிடும். அம்மை குத்தும்பால் பசுமாட்டில் எடுத்ததாயிருந்தால் மெத்த நன்மை.

பிறந்தகுழந்தை அழாதிருந்தால் அழச்செய் சிகிச்சை.

பிறந்த சிசு அழாதிருந்தால் அதன் முதுகின்மேல் மெதுவாய் இரண்டொரு தட்டு தட்டிக் கொடுத்தாலாவது அல்லது முகத்தில் குளிர்ந்தஜலத்தை இலேசாய் தெளித்தாவது அழத்தொடங்கும் குழந்தை பிறந்தவுடனே மூச்சு விடுவதற்கு லகுவாயிருக்கும்படி மல்லாத்திப் படுக்கவைக்கவேண்டும்.

பிரசவ ஸ்திரீயின் ஜன்னி சங்காரணி.

பிரசவித்த ஸ்திரீகளுக்கு ஜன்னிகண்டால் யானைக் கோரோசனை, பெருங்காயம், மிளகு இவைகளை சமமாய்ச் சேர்த்து சுத்தஜலம் வார்த்தரைத்து மிளகுபிரமாணம் உருட்டிக்கொடுக்கவும்.

பிரசவித்தஸ்திரீயின் உதிரச்சிக்கல் நிவாரணி.

பிரசவித்தவர்களுக்கு உதிரச் சிக்கல் யேற்படுமானல் பெருங்காயம், வாலேந்திரபோளம், மிளகு, சுக்கு, வகைக்கு இரண்டுவிராகனிடை சேர்த்து வேளைக்கு ஆழாக்கு கியாழமாகக் கொடுத்துவர உதிரச்சிக்கல் நிவர்த்தியாகும்.

கஷ்டப்பிரசவ நிவாரணி.

கர்ப்பிணி பிரசவிக்கக் கஷ்டமா யிருந்தால் அபின் 2-குன்றியிடை கஸ்தூரி 1-குன்றியிடை சேர்த்து மாத்திரை செய்துகொ

டுக்க நல்ல நித்திரை பிறந்து மேல்மூச்செடுப்பது சமன்படும். பிரா
ந்தி யாயின் இவைகளில் ஒன்றைக் கொஞ்சமாகக் கொடுக்கலாம். ப
த்தியமில்லாமல் தேகபோஷணைத் தருகிற கஞ்சியினங்களையும் கொ
டுக்கலாம்.

இன்னும் ஒரு கழஞ்சு குங்குமப்பூவை சோம்புக் கியாழத்தி ல
ரைத்து ஷை கியாழத்திலேயே கொடுக்க வெளிப்படாமல் உபத்திர
வப்படும் பிண்டம் வெளிப்படும்.

மரித்தபிண்டத்தை வெளிப்படுத்தும் விதம்.

சக்கம்வேர் பலம் அரையை வெந்நீர் விட்டரைத்து ஷை நீரி
ல் கலக்கி உட்கொள்ள மரித்தபிண்டம் வெளிப்படும்.

இரத்தப் செருக்கு நிற்க.

ஆலம் விழுது ஆலங்கொழுந்து ஆலம்பூ ஆலம்வேர் ஆவாரை
வேர் பட்டை இவைகளைச் சேர்த்துப் பசுவின்பால் விட்டிடித்த ரச
ம் ஆழாக்கு கால் அரை முக்காலாக காலையில் மட்டும் சாப்பிட நின்
றுவிடும்.

பூங்காவியையும் உலர்ந்த மாதுளம் பூவையும் சமன் கூட்டிச்
சூரணித்து வராகனிடை இருவேளையும் வெண்ணெயில் சாப்பிட்டுவ
ர பெரும்பாடு முதலிய இரத்தப்பெருக்கு நிற்கும்.

கற்றாழை நாற்றக் கஷ்டத்தை மாற்றல்.

வாய்விளங்கம் கஸ்தூரி மஞ்சள் சடாமாஞ்சி கசகசா கார்போக
அரிசி பச்சிலை சந்தனம் கிச்சிலிக்கிழங்கு கோரைக்கிழங்கு இவைக
ளைச் சமனாகச்சூரணித்து ஸ்நானகாலத்தில் பூசி ஸ்நானஞ்செய்துவர
சுகந்த ஆரோக்கியமாகும்.

கட:—ஏ நாதா! நாம் இதுபரியந்தம் இல்லற விதிகளாகி
குடும்பஸ்தர்களான நாயக நாயகிகள் ஒவ்வொருவரும் தெரிந்துக்
கொள்ளவேண்டிய சர்வ தர்ம தர்மங்களையும் சாங்கோ பாங்கமாகச்
சொல்லியனவெல்லாம் சுருதியினு மிகமதித்துச் சிரமேற் கொண்
டேன். ஆயினும் இதைக் கேட்டுணர்ந்த எவர்களும் தங்கள் தங்கள்
வாழ்நாட்களை வீணாளாக்காது நல்ல சரீர சுகத்தோடிருந்து உத்தம
மான புத்திர சந்தானங்களை அடையக்கூடுமே யொழிய மறுமைப்
பிரயோஜனமாகிய முத்தி யின்பத்தைப் பெற ஏதுவழி யில்லைபோ

லைக் காண்கின்றதே! எத்தனை காலம் ஜீவனோடிருப்பினும் எவ்வளவு
சுகந்தை யடையினும் அநேகம் பிள்ளைகளைப் பெற்றினும் இவைக
ளிலெல்லாம் பெறப்படும் இன்பமானவை இத்தேகம் அழியும்போ
து அவைகளும் அழியக்கூடியனவே யன்றி வேறில்லையே ஆதலின்நி
த்தியதேகத்தை யெடுத்து என்றுமழியாப் பேரின்பசுகத்தை யடைய
க்கூடிய ஞானமார்க்கத்தைப்பற்றிச் சிறிது கிருபைசெய்ய மிகவும் பி
ரார்த்திக்கிறேன்.

இனை:—ஏ மாதே! சர்வஜீவ சாக்ஷியாய் விளங்கும் ஜெகதீசன்
அண்டாண்டங்களிலுள்ள வெல்லாப் பண்டு பதார்த்தங்களிலும் ஒ
ன்றியு மொன்றுமனுமாயிருந்து ஆன்மகோடிகள் பிராரப்த சஞ்சித
ஆகாமியமென்னும் முத்திறவழியாற் பெறப்பட்ட கர்மதேகத்தைத்
தொலைப்பித்துக் கைம்மாறு வேண்டாத கருணை மேலீட்டினாலே ஞா
னதேகத்தை யளித்து ஈற்றில் தன்னை யடையவேண்டுமெனக் கரு
தியே அண்டத்தமர்ந்தவாறே பிண்டத்து மமர்ந்துளாராதலின் நீ
அதனை [illegible]ரையாகத் தெரிந்துகொண்டு உனக்குள்ளே அந்தர் முக
மாக ஆராய்ந்து வருவையேயானால் அங்கே யகரவொன்றைப் பாசி
வம் தமதருட்சத்தியாம்பரையோ டெழுந்தருளியிருக்கும் திவ்யதிரு
க்கோலக் காக்ஷியைத்தினமிதம்ழ் தரிசித்துப் பிறப்பிறப்பில்லாப் பெ
ருவாழ்வெய்தலா மென்றறிக.

கம:—ஏ நாதா! பிண்டமாகிய வென்னுள்ளே யெழுந்தருளியி
ருக்கும் எல்லாம் வல்ல எம்பிரானையும் எனதருளன்னையையும் எது
மறியாச் சிறுகுழவியாகிய ஏழைமதிப்பேதைகளாம் யானோ தே
டிக் கண்டுகொள்ளக் கூடியவள்? இது ஆச்சரியத்திலும் ஆச்சரிய
மே! முன்னே பிரம விஷ்ணுக்களாலும், வேதங்களாலும் அண்டத்
தின் தேடியுங் கிட்டாத பரம்பொருளை பேயினுமிழிந்த விப்பெண்
பேய்தன் பின்னைமதி வாராய்ச்சிக்குப் புலப்படும்; இது கடலைக்கை
[illegible]னாலே நீ[illegible] கரையேறலாமெனத் துணிந்த கயவர் கருத்தாய்
முடி[illegible]மொழிய வேறன்று ஆகலின் நாம் ஏதோ ஆராயவேண்
டும் பிராயவேண்டும் என்று பூராயமாய்ச் சொல்லிக் கழித்துவிட வ
ழி பார்ப்பதை விட்டுக் கொஞ்சமேனும் வஞ்சனையில்லாது தஞ்ச
மென்று தான்பணிந்த தமியேனை அஞ்சலென்று அபயஞ் செய்வ
தே ஆன்றோர்க்குரிய சான்றும் பெருமையாதலின் அடியேன் அந்
தர் முகமாக ஆராய்ச்சி செய்யவேண்டிய தத்துவமார்க்கப் பரிசீலனை
யைப் பற்றித்தாயே யெனக்கு இன்றியமையாத ஞானகுருவாயிருந்
து உபதேசிக்கும்படி தங்களது தாள்பணிந்து வேண்டுகிறேன்.

தின:—ஏ மா[illegible]த கேள்! யான் முன்னே கூறிவந்த குடும்பாசிய சாஸ்திரங்களை நீ கேட்டுவந்தது பெரியதோர் காரியமன்று; இப்போது நீ விரும்பிக்கேட்பது தத்வ ஞானிகளின் தனிவழியாம் இனியதோர் சாதன சதுஷ்டயங்களைப் பற்றியும் அவ்வத்தலம், அவ்வத்தமூர்த்தி, அம்மூர்த்திகளின் சுவரூபம் அவரவர்களின் பீஜாக்ஷர முதலான எல்லா விஷயங்களைப் பற்றியும் கூறிவருவதை மிக்க மதிநுசமான ஞானக்கருத்தா லறிந்துகொள்ளவேண்டும்.

சிற்றின்ப சாஸ்திர முற்றிற்று.

பரஞானப் பிரகாசிகை.

பரனிலக்கணம்.

பரமாவது, தனது மூலாதிபிலே பரனென்றும், ப[illegible]ரயென்றும் பரைகுடிலையென்றும், பரநாதமென்றும், பரவிந்துவென்றும், ஆதாரம் ஆறும்; இதன் விபரம்; பரமாகிய நா[illegible]தி பராபரமாகிய பெரும்பாழ் வெளியிலே ஆண் பெண் அலி மூன்றுக்கும் அன்னியமாய் இருள் ஒளி வெளி மூன்றிற்கும் அப்பால் விசுவப் பிரகாசனு யெழுந்தருளிய தற்பரசிற்பர மூர்த்தியானவர்; தாரதலம் படைக்கவேண்டி பராபரத்திலே பரமாகிய வெளியே வீடாகக்கொண்டு அப்பெருவெளி வீட்டுக்குள்ளே பரனும் பரையுங்கூடிய கூட்டம்பரை குடிலையாம்.

பரத்தின் விரிவு.

குடிலையிலே பூதாதியாகிய சுத்த மாயையும், [illegible]ம்மாயையிலே பரநாதமும், அதிலே பஞ்சகர்த்தாக்களும், அதிலே பஞ்ச[illegible]தாத்மாவும் அவ்வாத்மாவிலே பஞ்சபூதந் தோன்றியும், அவ்வத்துவில் சப்ததாவும், அத்தாதுவிலே நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்துநான்கு நூறாயிர ஜீவபேதங்களும் தோன்றியன இவைகளே பிண்டாண்டமாய் படைத்தன் முதல் ஐந்தொழிலாய் நின்றன. பரமாத்மன், சிவப்பாழ் சிவப்பாழ் பரப்பாழென்னு முப்பாழுங் கடந்து பெரும்பாழ் வெளியிலே விசுவப் பிரகாசனுய் விளங்குஞ் சொரூபங் காணக்கிடைத்தல் அரிதினுமரிதாம்.

தேவதாக்ஷரம்.

பரனெழுத்து ஹரீம்; பரையெழுத்து ஓங்காரம்; குடிலையெ ழுத்து ரீங்காரம்; பரவிந்து வெழுத்து ஸ்ரீங்காரம்; அந்த ஸ்ரீங்கா ரத்திலே சதாசிவனெழுத்து யகாரம்; அந்த யகாரத்திலே திரோதா யனாகிய மகேஸ்வர னெழுத்து வகாரம் அவ்வகாரத்திலே உருத்திர னெழுத்து சிகாரம் அச்சிகாரத்திலே விஷ்ணுவெழுத்து மகாரம் அம்மகாரத்திலே பிரமனெழுத்து நகாரம் அந்நகாரத்திலே சர்வான் மாக்கள் தோன்றின. அவ்வான்மாக்களிலே ஆகாசம் வாயு, அக்கினி தண்ணீர், மண் ஆகிய இவைகள் தோன்றியும், அம்மண்ணில் அண ல் முதலாகிய பதினெண்வகையுந் தோன்றி, அப்பதினெட்டில் சப்ததாது, எழுவகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்து நான்கு நூறாயிரமுந்தோன்றி யொடுங்க, அம்முறையே வந்தவழி யேசென்று ஒவ்வொன்றில் ஒவ்வொன்றாய் அப்பாவெளி வீட்டுக் குள்ளே ஒடுங்கும்.

ஊமையெழுத்து.

பரத்துக்கப்பால் சிற்பரம் உகாரம், அவ்வுகாரத்தின் மேலே தற்பரம் அகாரம், அத்தற்பரத்தின் மேலே சிவப்பாழ் சிகாரம், அச் சிவப்பாழுக்கு மேலே சிவப்பாழ் வகாரம், அச்சிவப்பாழுக்கு மே லே பரப்பாழ் யகாரம், அந்த யகாரத்தின் மேலே பெரும்பாழாகிய வெளியே ஊமையெழுத்து.

மூலபஞ்சாக்ஷரம்.

ஓம் நமசிவாயா வென்றது ஆதாரம், ஓம் சிவாயநம வென்றது நிராதாரம், ஓம் ஆம் அவ்வுஞ் சிவாயவென்றது மீதானம், இம்மூன் றிற்கு மப்பாலே ஆம் ஊம் சிவாயநமவென்ற அக்ஷரமே மூல பஞ் சாக்ஷரமாம். இது அடி முடியுந் தானும் நடுவெளி கமலபாதமாய் நி[illegible]

ஸுழிமுனைச்சோதி.

மீதானத்தில் பேரொளிப் பிரபையே நிராதாரம், பரமாவது வெளி, சிவமாவது அறிவு, சக்தியாவது மனம், குடிலையாவது மா யை, நாதமாவது வலது நாசி சூரியன். விந்தாவது இடதுநாசி சந்

திரன் இதுவே ஓம் சிவாயவென்னு மேலாம்பதமாம், ஓமென்றது உச்சியு மூலமுமொன்றாயுருவி நிற்கும். சிவாயவென்றது சோதிமய மாய் நிற்கும். அச்சோதி புருவத்திடைவெளி உச்சி உண்ணாக்கு மேலாய்ப் பேரொளியாய்க் காணவும்; தன் மயமாய் நிற்கும் பேரொளியே நல்வினை தீவினைக்கு நடுவாய் அடிமுடிக்கும் நடுவாய் இடை பிங்கலைக்கு நடுவாய் இரவு பகலுக்கு நடுவாய் விளங்கி அருவுருவில்லா தானந்த மயமாய் நின்ற அவனைக்கண்ட பரமஞானிகளே மேலான சாயுச்சியத்தைப் பெறும் பாக்கியவான்கள்.

ஆதாரம் நடு மூலம், நிராதாரம் நடு இருதயம், மீதானம்புருவ மத்தியமாம். அந்த நாதாந்த சோதியை மனவாக்குக் காயமொருமித்து பிரமாந்திரத்தில் நோக்கவும்; நோக்குமிடமே சுழிமுனையாம்.

நடு நிலைஞான விளக்கம்.

இரம், பரம், பராபரம் என மூன்றுண்டு. இவற்றுள் இரமாவது பிண்டம், பரமாவது அண்டம், பராபரமாவது பேரொளியாம். இவற்றுள்ளும் இரமாவது இறந்தவிடம், இரமும் பரமுங் கலந்த விடமே பராபரமாம். இதுவே நடுநிலை ஞானமாம். இரத்திலும் பரத்திலும் உட்பட்ட பதங்களை நோக்கினால் அவை அழியும்போது தாமும் அழிவார்; ஆகையால் அழியாப்பதமாகிய நடுநிலை ஞானத்தையே தானவனாக நினைக்கத் தற்பராபரமாகுவர்.

நடுநிலையாவது சுழிமுனை; அதுவே ஓங்காரமாய் மந்திரகிரியாய் கடவுள் நாடியாய் அக்கினி, ஆதித்தன், சந்திரன் மூன்றும் ஒன்றானவிடம். ஆதாரஞானம், நிராதார ஞானம், மீதான ஞானம், என்ற மூன்றுங் கடந்தவிடமே பரஞானமாகிய நடுநிலை யோகத் தானமாம். நடுநிலை மந்திரம் ஆம் ஊம் ஓம் சிவாயநமவென்ற அஷ்டாக்ஷரமாகும். ஆமென்றது அடியும் ஊமென்றது நடுவும் சி யென்றது சிவமும் வாவென்றது சத்தியும் ய வென்றது ஆத்மாவும் நவென்றது திரோதயமும் ம வென்றது மலபரிபாகமுமாய் நிற்கும். அகாரம் திருவடி உகாரம் திருமேனி ஓங்காரந் திருமுடி ஐந்துமுகமாய் நிற்கும். அதாவது ஈசானம், தற்புருடம், அகோரம் வாமம் சத்தியோசாதமாம் அதுவே சப்தஸ்பரிச ரூப ரசகந்தமுமாய் பஞ்ச தேவதைகளுமாய் பஞ்சசத்திகளுமாய் பஞ்ச தொழிலாயுமிருக்கும். பஞ்சதேவதைகளின்வீடு: பிரமம் மூக்கு விஷ்ணு நாக்கு உருத்திரன் கண் மயேசுரன் உடம்பு சதாசிவன் செவி, இவைகள்

தேசமாவது பிரமதேசம் மண் விஷ்ணுதேசம் தண்ணீர் ருத்திர தேசம் அக்கினி மகேஸ்வர தேசம் வாயு சதாசிவ தேசம் ஆகாயம் இதுவே பஞ்சகிர்த்தியமாய் நிற்கும்; இதுவே பிரண்டாண்டப் பே ரொளியா . யெங்குந்தானு யெவ்விடமும் தம்மிடமா யெச்செயலுந் தற்செயலாய் நிற்கும் என்றவாறு.

கம:—உய்ந்தேன் உய்ந்தேன் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வைகளில் எனக்கு ஒவ்வோ ரமயங்களில் நேரும் சந்தேக விபரீதங் களுக்கு யான் கேட்கும்போதெல்லாம் கிருபைசெய்ய நமஸ்காரம்.

பரஞானப் பிரகாசிகை முற்றிற்று.

செந்தமிழ் விளக்கம்.

திராவிட தேசமென்னும் இத்தமிழ் நாட்டிலே பிறந்துள்ள நம்மெல்லோரும் தமிழ்ப் பாஷையைப் பயின்று அதன் சரித்திரப் பெருமையைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமாதலின் இங்கு சிறிது சுருக்கிச்சொல்வாம்.

சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைகளுக்கும் முத லாசிரியர் சிவபெருமான். சிவபெருமான் சமஸ்கிருதத்துக்கு இலக் கணநூல் பாணினி முனிவருக்கும் தமிழுக்கு இலக்கணநூல் அகத் திய முனிவருக்கும் அருளிச்செய்தனர். அம்முனிவர்க ளிருவரும் முறையே அம்முதனூல்க ளிரண்டின் வழியாகப் பாணினீயம் அக த்தியம் என்னு நூல்களை அருளிச்செய்தார்கள். திராவிடமென்னும் வடமொழி தமிழென்றுமிற்று.

தமிழ் வழங்கும் தேசம் பரதகண்டத்தில் வடக்கின் கண்ணே திருவேங்கடமும், தெற்கின்கண்ணே கன்னியாகுமரியும் கிழக்கின் கண்ணும் மேற்கின் கண்ணும் கடலை யெல்லையாகவுமுடையதென்னு டாம். இத்தென்னாடு திராவிட தேசமெனவும் பெயர் பெறும். இத் தென்னாட்டில் வழங்குதல் பற்றித் தமிழ்மொழியைத் தென்மொழி யெனவும் வழங்கப்படும். சமஸ்கிருதம் பொதுவாயினும் ஆதியிலே வடதிசையினின்றும் தென்றிசைக்கு வந்தமையால் வடமொழி யெனப்படும்.

அகத்திய முனிவருக்குச் சிவபெருமானேயன்றி முருகக்கட வுளும் தமிழைச் செவியறிவுறுத்தி யருளினர். அவ்வகத்திய முனி

வருக்கு மாணாக்கர் பன்னிருவர்:—தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பனார், அவிநயனார், காக்கைபாடினியர், நற்றத்தனார், வாமனர் ஆகிய இவர்களாம். அகத்தியமுனிவர் தாஞ்செய்த அகத்தியத்தை அப்பன்னிரண்டு மாணாக்கர்களுக்குங் கற்பித்தருளினார். அப்பன்னிருவர்களும் அவ்வகத்தியத்தை முதனூலாகக்கொண்டு தனித்தனியே வழிநூல் செய்தார்கள். அவைகளுள்ளே சமதக்கினி முனிவருடைய புத்திரரும் திரணதூமாக்கினியென்னும் பெயரை யுடையவருமாகிய தொல்காப்பிய முனிவர்செய்த நூலே மிகச் சிறந்ததாம். தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணாக்கர்களுங் கூடிப் புறப்பொருட் பன்னிருபடலம் என்னும் ஓர் நூல் செய்தார்கள்.

அகத்தியத்துள்ளே இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூன்று தமிழும் விராவிக் கூறப்பட்டன. அவற்றுள் இயற்றமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் தொல்காப்பியர் முதலாயினோர்: இசைத்தமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் பெருநாரை பெருங்குருகு முதலிய நூலுடையார். நாடகத்தமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய முதலிய நூலுடையார். தமிழ்மொழி தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களாலும் ஆராயப்பட்டது. இச்சங்க மூன்றையுந் தாபித்தவர்கள் பாண்டியவரசர்கள். தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் இறையனார், குமரவேள், அகத்தியமுனிவர் முதலாகிய 549-பேர்களாம். அவர்களுக்கு நூல் அகத்தியம்.

இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் அகத்தியர் தொல்காப்பியர் முதலாகிய 59-பேர்களாம். அவர்களுக்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமுமாம்.

கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் நக்கீரர், மருதனிளநாகனார், சிறுமேதாவியார் முதலாகிய 49-பேர்களாம். அவர்களுக்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமாம். அவர்கள் சரஸ்வதியினுடைய திருவவதாரமாயுள்ளவர்கள். சதுரமாய் இரண்டு சாணளவுள்ளதாகிய சங்கப் பலகையொன்று அவர்களுக்குச் சிவபெருமானாலே கொடுத்தருளப்பட்டது. அது மெய்ப்புலவர்களுக்கெல்லாம் முழம் வளர்ந்து இருத்தற்கு இடங்கொடுப்பது, அக்கடை

ச்சங்கத்துப் புலவர்கள் சுந்தரமூர்த்தி நாயனாராலே திருத்தொண்டத்தொகையிலே "பொய்யடிமை யில்லாப் புலவர்கள்" என்று துதிக்கப்பட்டார்கள்.

கடைச் சங்கத்தார் காலத்திலே இறையனார் பாண்டியன்பொருட்டு "அன்பினைந்திணை" என்பது முதலிய அறுபது சூத்திரங்களினாலாகப் பொருணூல் செய்தருளினார். அது களவியலெனவும் இறையனாரகப் பொருளெனவும் பெயர் பெறும். அதற்குக் கடைச் சங்கத்துப் புலவர்கள் 49-பேர்களும் தனித்தனியே உரைசெய்தார்கள். அவ்வுரைகளுள்ளே நக்கீரர்செய்த உரையே முருகக்கடவுளது திருவவதாரமாய் மதுரை வைசியர் மரபிற்றோன்றிய ஐந்தாட்பிராய முடைய உருத்திர சன்மராலே மெய்யுரையெனக் கொள்ளப் பட்டது.

பிரமதேவருடைய திருவவதாரமாய் விளங்கிய தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறளென்னும் உத்தர வேதத்தைச்செய்து, மேற்கூறிய கடைசசங்கத்தில் அரங்கேற்றி யருளினார். அப்போது அசரீரி வாக்கின்படியே சங்கப்பலகை அத்திருவள்ளுவ நாயனாருக்கும் உருத்திரசன்மருக்கு மாத்திரமே இடங்கொடுத்தது. தமிழும், சமஸ்கிருதமும், சிவபெருமானாலும், இருடிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கண நூல்களை யுடைமையாலும், ஆன்றோர்களாலே தழுவப்பட்டமையாலும், தம்முள்ளே சமத்துவமுடையனவேயாம்;

காஞ்சிப்புராணம்.

வடமொழியைப்பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியை யுலகமெலாந்தொழுதேத்துங்
குடமுனிக்குவலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பினிதன்பெருமை யாவரேகணித்தறிவார்.

இருமொழிக்குங்கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப
விருமொழியும்வழிப்படுத்தார்முனிவேந்தரிசைபரப்பு
மிருமொழியுமான்றவரே தழீஇயினாரென்றாலிவ்
விருமொழியுநிகரென்னுமிதற்கையமுளதேயோ.

திருவிளையாடற் புராணம்.

கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழேனை
மண்ணிடைச்சிலவிலக்கணவரம்பிலாமொழிபோ
லெண்ணிடைப்படக்கிடந்ததாவெண்ணவும்படுமோ.

தொண்டர்காதனைத்துதிடைவிடுத்ததமுதலே
யுண்டபாலனையழைத்ததுமெலும்புபெண்ணுருவாக்
கண்டதும்மறைக்கதவினைத்திறந்ததுங்கன்னித்
தண்டமிழ்ச்சொலோமதிபுலச்சொற்களோசாற்றீர்.

அமிர்தவாசகம்

கல்வி.

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்களுக்குள் முதலிலே தேடவேண்டுவது கல்விப் பொருளாம்; அதாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையெவையெனில், அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தம் நான்கையுந்தருதற்கு யோக்கியமான நூல்களாம். உயர்குலமும் அழகும் செல்வமும் உடையவராயினும், கல்வி யில்லாதவர் முருக்கம்பூவுக்குச் சமமாவர். இராஜாக்களினுங் கற்றறிந்தவரே சிறப்புடையவராதலின் யாவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல்வேண்டும்.

கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

அறஞ்செய்யார் திரவியமடையுங்கதி.

தற்காலத்திலே சிலர் தங்கள் பொருள்களை தருமத்திலே சிறிதும் செலவு செய்யாது தங்கள் பிள்ளைகளுக்கு வைத்துவிட்டு இறந்துபோகிறார்கள். அந்தப் பிள்ளைகள் அந்தப் பொருளை நிலையென்று நினைத்து கல்வியை அவமதித்துச் சோம்பேறிகளாய்த் திரிந்துவிட்டு, அந்தப் பொருளெல்லாம் வியபிசார முதலியவைகளிலே சில்காலத்துள் செலவிட்டு வறியர்களாயும் தீராத வியாதியாளர்களாயும் அலைகின்றார்கள்.

சிலர், தங்களை நம்பிய பெண்டிர் பிள்ளைகளையுங் கைவிட்டுத் தாசிகளை நம்பி தங்கள் பொருளெல்லாம் அவர்களுக்கே செலவு செய்கின்றார்கள்.

சிலர், தங்கள் பாகஸ்தர்களோடு வழக்குத் தொடுத்து அவ்வழக்கிலே யெல்லாம் செலவிட்டு அவர்களையும் வறியவர்களாக்கித் தாங்களும் வறியவர்களாகின்றார்கள்.

சிலர், தங்கள் விரோதிகள்மீது வைராஞ்சாதித்துப் பொய்வழக்குத் தொடுத்துப் பொய்ச்சாக்ஷிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்

கும் லஞ்சங் கொடுத்தலிலே தங்கள் பொருளெல்லாம் செலவழிக்கின்றார்கள்.

சிலர், தாங்கள் உண்ணலும், உடுத்தலும், ஆபரணந் தரித்தலும், வாகனமேறலும், கூத்துப் பார்த்தலும், கீதங் கேட்டலுமே மனிதப்பிறப்பாலாகிய பயனென்று நினைத்து எல்லாப்பொருளையும் அவைகளின்பொருட்டே அழிக்கின்றார்கள்.

பசி தாங்கக்கொண்டு தங்கள் வாசற்படிவந்த ஏழைகளுக்குக் கஞ்சியேனும் தண்ணீரேனுங் கொடாதலோபிகள், பூரிகொடுக்கப் போகின்றோமென்றுசொல்லி இடமுங் காலமும் வரையறுத்துக் கொடிகட்டி வெறுந்தடியர்களுக்கே தாரைவார்க்கின்றார்கள்; ஆதலின் இவ்வாறெல்லாந் துர்விநியோகமா யழிவதிலும் தரும வழியிலே செலவுசெய்து இம்மை மறுமைப்பயன் பெய்துவதே அறிவாளிகளின் கடமை.

கடன் கால விடம்.

நம்தேசத்தில் பெரும்பாலார் ஆபரணஞ் செய்விக்கற்கும் வண்டிகுதிரை வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும், வியாபாரஞ் செய்வதற்கும், விளைநிலந்தோட்ட முதலியவை வாங்குவதற்கும், விவாகஞ் செய்வதற்கும் ஏராளமாகக் கடன்படுகின்றார்கள். பின் அவர்கள் வட்டி வளர்ந்தபின் கடன்தீர்க்க முடியாமல் மேற்கூறிய ஆபரண முதலியவைகளை விற்கின்றார்கள். அவை வாங்கிய விலைக்கு விலைப்படாமல் குறைத்து விற்று வட்டிக்கு முதலுக்கும் ஈடுபடாமல் தங்களிடத்து முன்னுள்ளதான தாவரசங்கமப் பொருளையும் விற்றுக் கொடுத்துவிட்டுத் தரித்திரர்களாய் வருந்துகின்றார்கள். ஆதல்கொண்டே கடனை விஷமென்றார் கற்றோர்.

ஸ்நானஞ் செய்யாம லுண்கிறவன் மலத்தை யுண்ணுதலுக்கும், செபஞ் செய்யாதுண்ணல் இரத்தத்தையும் மூத்திரத்தையும் உண்ணுதலுக்கும், பூசை செய்யாதுண்டல், புழுவையும் பிணத்தையு முண்ணுதலுக்கும், பாலர் முதலாயினோர்க்கு முன்னுண்ணல் பெருகமலத்தை யுண்ணுதலுக்கும், பிச்சையிடா துண்ணல் விஷத்தை யுண்டதற்கும் ஒவ்வுமாம். இவர்களெல்லாரையும் யமதூதர்கள் நரகத்தில் வீழ்த்தி இவர்கள் நாக்குகளிலே அக்கினியிற் காய்

ச்சிய இருப்பாணிகளை யறைந்து இவர்கள்மேல் பஞ்சலோகமும் உருக்கி வார்ப்பார்களென கர்மநூல் மூறையிடுகின்றமை மேலே கூறப்பட்டவைகளில இயன்றமட்டும் அனுசரித்தல் மே மென்பது ஆன்றோர் கருத்து.

கடவுளும் புண்ணிய பாவமும், சுவர்க்க நரகமும், மறு பும், முத்தியும் நிச்சயமாக உண்டென்னும் உண்மையை ஒ தும் மறக்கலாகாது.

தமையன் மனைவியைக் குருபத்தினியாகவும், தம்பி மனை மருமகளாகவும், பிறர் மனைவியரைத் தாயும் தமக்கையும் த மாகவும் பாவித்தல் அறிவுளோர் கடனும்.

உதயகாலத்திலும் அஸ்தமயன காலத்திலும் சயனம், னம் அத்தியயன மென்னுமிவைகள் கூடாவாம். ஏனெனில், த்தால் மூதேவியும், புசித்தலால் வியாதியும், அத்தியயனத்தா யுள் குறைவும் ஏற்படும். அத்தியயனம்-வாசித்தல்.

தேவால[illegible], ஆறு, குளம், கிணறு, பூந்தோட்டம், [illegible] லிவைகளிற்குச் சமீபத்திலும், சனங்கள் சஞ்சரிக்கு மிடங்க[illegible] பசுமேயு மிடங்களிலும், மரநிழலிலும், உழுத நிலத்திலும், நடுவிலும், வழியிலும், சுடுகாட்டிலும், அறுகம்புல் பூமியிலும், லும், தண்ணீரிலும், மலசலங் கழிக்கலாகாது, மற்றவிடங்களில் [illegible] வடக்கு முகமாக விருந்து கழித்தல் கிரமமாம்.

அமிர்தவாசக முற்றிற்று.

அயக்காந்த திராவகம்.

அநுபவமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!!

மித்திராசனே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடியவியா
திகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை ஆயிரக்கணக்கான
ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினலாவது
கெட்டசகவாசத்தினலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப்
புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்றமருந்தாகும். ஆங்கி
லேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையானமருந்து. சாப்பிடுவ
தற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோயால் அவஸ்தைப்படுகிற
வர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான
சுகத்தையடைவார்கள். இதனல் தீரக்கூடிய அநேக வியாதிகளில்
முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினலாவது புழுவெ
ட்டினலாவது மயிர் உயிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். க
ண்ணெரிச்சல் கைகால்காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டு
பண்ணும். தேக அசதியையோட்டி ஜீரணசக்தியையும் நல்லபசியை
யும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்
கு அதிகவலுவைத்தரும். தேகத்தில் நல்ல ரத்தத்தைச் சுரப்பிக்கும்
[illegible] சீதளத்தினல் தீர்க்கும். வாதபித்தசிலேத்துமத்தாலு
ண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல
பலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டா
ல் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்
தைப் பழையபடி அடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையா.
40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி எவ்விதமும் அம்
மனிதனின் நிழலிலும் அணுகாது. தேகம் வஜ்ஜிரமேயாகும். இத
ற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்
லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியம
கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலில் வைத்துவரும்.

அரைமண்டலம் 30-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1—4—0 டஜன் 1-க்கு ரூபா—12.

ஒருமண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2—0—0 டஜன் 1-க்கு ரூபா—21.

இப்படிக்கு,

பி. நா. செம்பாமுதலியார் அண்டு கோ,

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்